www.padippakam.com

3-10 மடங்கல் : தி.பி. 2032
(ஆகத்து-2001)
விலை: உரு. 5.00

உறைக்கும்

# மக்கள் தமிழகம்

இந்திய சாணக்கியம் நசுக்கும் நாகலாந்து, மணிப்பூர் விடுதலைப் போராட்டங்கள்.

சுதேசியா தமிழ்த்தேசியா

ஐ.நா. மாநாட்டில் குரலெழுப்புவதைத் தடுக்க இந்தியா யார்?

## தன்னுரிமை விவாதம் தொடரட்டும்

வீரமணியின் ஆசியின்கீழ் தமிழக அரசே செய்யும் யாகங்கள்!

இந்திய சதிகளை விர்யாமல்...

## ஆறாத புண்ணுடன் பொன்னூர்

பாரதீய சனதா - ம.க.இ.க. போன்ற சுதேசிகள் உணர்வார்களா?

காஷ்மீர் மக்களுக்கு எதிராக நடந்த இந்திய - பாக்கிஸ்தான் பேச்சு!

தமிழக அரசியல் பண்பாட்டு விடுதலை மாத இதழ்

படிப்பகம்

www.padippakam.com

# ஆனாலும் அழத்தெரியவில்லை, எங்களுக்கு...



எங்களின் குரல்
எட்டாத இடம் எல்லாம்
எட்டிய குரல்...
'அய்யோ...' என்று
அலறும் அந்தத்
தலைவரின் சத்தம்...

அலறிய குரலில்
அறிந்தது உலகம்
'இந்தியா - உலகின்
பெரிய
சனநாயக நாடு'.......

தானே
அம்பலப்பட்டு
அம்மணமாய்
இந்தப்
பார்ப்பனிய நாடு.

நாங்கள் மட்டுமே
கண்டுவந்த
சனநாயக
நிர்வாணத்தை...
நிலம் முழுதும்
கண்டிருக்கும்...

அன்று
மனிதநேயர்களாய்
மாறிவிட்ட
பத்திரிக்கைகள்...

அன்றுதான் மக்களாட்சி
அழிந்ததாய் சொன்ன
தொலைக்காட்சி...

கண்ணீர்விட்டு அழுத
கட்சிக்காரர்கள்...

... ஆனாலும்
அழத்தெரியவில்லை,
எங்களுக்கு..

ஆத்தாவின்
சிக்குமயிர் பிடுங்கி
எங்கள்
மூக்கினில் சொருகி
மூச்சிறுகிச் சாகின்ற
அடிமை வாழ்வில்
அகப்பட்டுக் கிடப்பதால்...

அதற்கெல்லாம்
அழத்தெரியவில்லை
எங்களுக்கு...

தடாவிலும் பொடாவிலும்
தள்ளியபோது
தழைத்த சனநாயகம்...

தாமிரபரணியின்
விரல்கள் இறுக்க,
மூச்சுமுட்ட செத்து
மடிந்தபோது
மலர்ந்த சனநாயகம்...

கொடியன்குளத்து
கொடுமையின்போது
செழித்த சனநாயகம்...

இந்தத் தலைவரை
இழுத்தபோது
இறந்துபோன கதை...

தமிழுக்காய்
குரல்கொடுத்தோரின்
குரல்வளை நசுக்கி
சிறையினில் இட்டபோது
சிறந்து விளங்கிய
சனநாயகம்...

அன்று
மனிதநேயர்களாய்
மாறிவிட்ட
பத்திரிக்கைகள்...

அன்றுதான் மக்களாட்சி
அழிந்ததாய் சொன்ன
தொலைக்காட்சி...

பாராட்டலாம்...
பரவாயில்லை
பார்ப்பனிய ஊடகங்கள்!

மொந்தை மூஞ்சி
மொடா விழுங்கி
பார்ப்பனச் சிறுக்கியின்
பாசீச வெறிப்
பயணம் இன்னும்
வளரும்...

அங்கீகாரம் பெற்ற
அடிதடி வீரர்கள்...
எங்கள் சேரியை
எரித்து முடித்தபோது
எங்கள் பெண்களை
மிதித்துப் போட்டபோது...
'கம்பளம் விரித்து
சம்பளம் ஏற்றி
கைகள் தட்டி
வழிகாட்டிய தலைவரின்
வாய் பிதற்றுகிறது,
'போலிசின்
காட்டுமிராண்டித்தனம்'

அதற்கெல்லாம்
எங்களுக்கு
அழத்தெரியவில்லை...

தமிழுக்கும்
தமிழருக்கும்... அவர்கள்
செய்த துரோகம்
ஆயிரம் ஆயினும்,
வருந்தியது
தமிழர்களின் மனம்...
'அடிக்கட்டும்' என்று
ஆனந்தப்படும்
மானங்கெட்ட
வீரமணிகள் அல்ல
'நாங்கள்' என்பது!

மக்களைத்
தாக்கும் இந்த
மூர்க்கக் கையையும்
முறித்துப் போடுவதே
நமது
சிந்தனையும்
செயலும்...

நம்மை
நசுக்கிப் பிழியும்
இந்திய விலங்கையும்
போலி சனநாயகத்தையும்
போட்டுத்தள்ளும் வரையில்...

உதைபடும், நம்
உரிமைகள்...
மிதிபடும் நமது
உயிர்கள்...

எதுஎன்னவானாலும்,
இந்த
பன்றிக் கூட்டம்
மூக்கைப் பிடித்துக் கொண்டு
'நாற்றம்... நாற்றம்' என்று
மாற்றி மாற்றி
தூற்றிக் கொள்ளும்...

இதற்கு
இதுவும் ஓர்
அடையாளம்!

www.padippakam.com

31

உழைக்கும்
**மக்கள்
தமிழகம்**

தொடர்புக்கு:
'உழைக்கும்
மக்கள் தமிழகம்'
57, இராசகோபால் தோட்டம்,
கருங்கல்பாளையம்,
ஈரோடு - 3.

இதழ்க் குழு

பொழிலன்
இளங்கோவன்
செல்வி
செந்தழல்
மார்க்சுவேனில்

# காஷ்மீர் மக்களுக்கு எதிராக நடந்த இந்திய – பாக்கிஸ்தான் பேச்சு!

உணவுப் பண்டங்களுக்காகக் கடித்துக் குதறிக் கொள்ளுகிற தெரு நாய்ச் சண்டை போல, காஷ்மீருக்காக இந்தியாவும், பாக்கிஸ்தானும் அலைந்து கொண்டிருக்கின்றன.நூ

தங்களின் படைபலத்தைக் கொண்டு சுட்டுத் தள்ளி வெறியாட்டம் ஆடிக் கொள்ளுகிற இவர்களுக்கு, இரண்டு நாடுகளிலும் ஏற்பட்டிருக்கிற நெருக்கடிகளைச் சரிசெய்வதற்காக நடத்தப் பெற்ற நாடகமே அண்மையில் நடந்து முடிவுறாத ஆக்ரா பேச்சு வார்த்தை.

கோடிக் கணக்கான ரூபாய் பணத்தைத் தண்ணீராகச் செலவழித்து, ஐந்து விண்மீன் விடுதிகளை விலைக்கு வாங்குவதும், தாஜ்மகாலைப் புதுப்பிப்பதும், ஆட்சியாளர்கள் அதிகாரிகள் என்கிற பெயரில் ஆயிரக் கணக்கானவர் தின்று தீர்த்ததும்தான் மிச்சம்.

அந்த இரண்டு நாள்களும் ஆக்ரா மக்களே அடக்கி வைக்கப்பட்டிருந்தனர். தெருவிலோ, வீட்டிற்கு வெளியிலோ யாரும் எட்டிகூட பார்த்துவிடக்கூடாது என்பது இந்திய சனநாயக அரசின் சட்டமாகவே செயல்படுத்தப்பட்டது.

ஆனால் இப்படி நடப்பது ஏதோ முதல் முறையாக நடப்பது அல்ல.

இதற்கு முன்னால் இதுபோல் பலமுறை பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டாலும் முறைப்படி காஷ்மீர் மக்களின் சிக்கலைத் தீர்ப்பது (!) என்கிற பேச்சில் இரண்டு முறை ஒப்பந்தமிட்டிருக்கிறார்கள் இவர்கள்.

தாஷ்கண்டு அறிவிப்பு சிம்லா ஒப்பந்தம் என்று 1966இலும் ஆக இரண்டு முறை இந்த இரு நாடுகளும் இணைந்து ஏற்றுக் கொண்ட முடிவுகள் அறிவிக்கப்பளபட்டிருக்கின்றன.

ஆனால், இதற்கு முன்னால் இதுபோலான பேச்சு வார்த்தைகள் எல்லாம் காங்கிரசு கட்சியின் ஆட்சியிலேயே செய்யப்பட்டன.

அப்போது ஆர்.எஸ்.எஸ்.சின் பின்னணியில் இயங்கி வந்த பாரதீய சனதா கட்சி பாக்கிஸ்தானுடனான பேச்சு வார்த்தை என்பதையே மறுத்து வந்தது.

'அகண்ட பாரதம்' என்னும் கொள்கையுடனும், பாரத மாதா இந்து மாதாவாக மட்டுமே இருக்கவேண்டும் எனும் வெறியுடனும் அலைகிற ஆர்.எஸ்.எஸ்.சின் குடுமிகளுக்குப் பாக்கிஸ்தானுடனான பேச்சுவார்த்தை என்பதே ஏற்கக் கூடியதாக இல்லை.

இப்போதும் ஆர்.எஸ்.எஸ். தன் பரிவாரங்களில் ஒன்றான பாரதீய சனதா கட்சி மூலம் பேச்சுவார்த்தை என்கிற நாடகத்தை ஒருபக்கம் நடத்திக் கொண்டிருக்கவே மறுபக்கங்களில் சிவசேனையைக் கொண்டு எதிர்ப்பதும் – பாக்கிஸ்தான் அதிபரான முஷாரப்பை இழிவுபடுத்துவதோடு ஒட்டுமொத்த இசுலாமியர்களையே இரண்டாந்தர மக்களாக இழிவு படுத்தவும் செய்வதை ஒப்பிட்டுப் பார்த்தால் தெரியும்.

தில்லியிலும், மும்பையிலும் சிவசேனை அமைப்பினர் முஷாரப்பின் கொடும்பாவியை எரித்ததும், தில்லியில் முஷாரப்பின் மூதாதையர் வீட்டை பாரதீய வித்யார்த்தி சேனை, அவர் அவ் வீட்டைச் சென்று பார்த்தார் என்பதற்காகக் கங்கையிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து கழுவிவிட்டதும் எவ்வளவு பெரிய இந்து வெறியாட்டங்கள்.

அன்றைக்கு சம்பூர்ணானந்து சிலையைத் தாழ்த்தப்பட்டவரான செகசீவன்ராம் திறந்து வைத்தார் என்பதற்காகச் சிலையைக் கழுவிவிட்டதும், திருச்சி - ஸ்ரீரங்கம் கோயில் கருவறைக்குள் ம.க.இ.க.வினர் நுழைந்ததோடு, அம்பேத்கர், பெரியார் படங்களையும் வைத்துவிட்டனர் என்றதால் சம்புரோக்ஷனம் எனும் பெயரில் கோயிலைக் கழுவிவிட்டது போன்றதுமான நூற்றுக்கணக்கான நிகழ்வுகள்வழி எப்படி தாழ்த்தப்பட்ட மக்கள் இழிவுபடுத்தப்படுகின்றனரோ, இரண்டாந்தரக் குடிமக்களாகப் புறந்தள்ளப்படுகின்றனரோ, அப்படி யல்லவா இன்றைக்கு முஸ்லீம்களையும் புறக்கணிக்கிறது இந்த ஆர்.எஸ்.எஸ்ள.இன் இந்திய அரசு.

படிப்பகம்

இந்தியப் பார்ப்பனியக் கட்டமைப்புக்கு எவரெவர் உடன்படுகின்றனரோ அவர்களை மட்டுமே தேச பக்தியாளர்கள் என்பதும், அதை ஏற்காதவர்கள் மக்கள் இல்லை என்கிற நிலையிலேயே மதிக்காத



போக்கிலுமல்லவா இந்திய அரசு இயங்கிக் கொண்டிருக்கிறது.

ஒருபக்கம் வெளிநாட்டுக் கொள்ளையர்களுக்கு இந்தியாவை வேட்டைக் காடாகத் திறந்துவிட்டுக் கொண்டு சுதேசியம் பேசுகிற இவர்களின் பொய் முகங்களில் இந்து வெறித்தனமும், பார்ப்பனிய நச்சுத் தனமும் அல்லாமல் வேறென்ன இருக்கின்றது.

இவர்கள் ஒருபக்கம் எனில், பாக்கிஸ்தான் அரசு இன்னொரு பக்கம் இஸ்லாமிய வெறியுணர்வை மட்டுமே ஊதிப் பெருக்கித் தன் அரசுக் கட்டிலைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது.

தலைவிரித்தாடுகிற ஏழ்மை, உலகளவில் கொடி கட்டிப் பறக்கிற ஆயுத விற்பனைப் புழக்கம், போதைப் பொருளுக்கு முற்றிலும் அடிமைப்பட்டுப் போயிருக்கிற பழக்கம் இவையெல்லாம் பாக்கிஸ்தானிய மக்கள் வாழ்க்கையை நாறடித்துக் கொண்டிருக்க அவை பற்றி யெல்லாம் கவலைப்படாமல், இந்தியாவை எதிரியாகக் காட்டி இஸ்லாமிய வெறியுணர்வை வளர்ப்பதும், காஷ்மீரப் பகுதியைப் பாக்கிஸ்தானுக்குள் இணைப்பது என்பதுமே அதன் நோக்கங்களாகக் கிடக்கின்றன.

ஆக, இந்த இரண்டு அரசுகளுக்கும் இந்த அரசுகளுக்குள் அடிமைப்பட்டுக் கிடக்கிற பல்வேறு தேசிய இன மக்களின் உரிமை வாழ்க்கையை நசுக்குவதும், அத் தேசிய இனத் தனிச் சிறப்புகளைச் சிதைத்து இந்தியப் பார்ப்பனியப் பண்புகளை மேலோங்க வைப்பதும், இஸ்லாமிய மதவெறிக்கு ஆளாக்குவது என்பதுமே நோக்கமாகப் போய்விட்டன.

இப் போக்குகளுக்கு ஆட்பட்டு பல்வேறு தேசிய இனங்கள் இவற்றால் நசுக்கப்படுவது நம் அனைவருக்கும் நன்கு தெரிந்ததே.

ஆயினும், காஷ்மீரே – இந்த இரு அரசுகளின் ஆக்கிரமிப்புகளுக்கும் அடாவடித்தனங்களுக்கும் ஆட்பட்டு நசுங்குகிறது என்பதை நாம் உணர்தல் வேண்டும்.

இன்னும் சொன்னால் இந்த இரண்டு அரசுகளுக்கு என்று மட்டும் அல்லாமல் சீனா உள்ளிட்ட மூன்று அரசுகளின் ஆளுமை வெறித்தனத்தாலும் காஷ்மீர் நசுங்குவதை நாம் உணர்ந்திடல் வேண்டும்.

அண்மையில் ஆக்ராவில் நடந்த பேச்சு வார்த்தைகள் காஷ்மீர் மக்களின் சிக்கல்களைத் தீர்ப்பதற்காகவோ, அல்லது காஷ்மீரில் நடைபெறுகிற வன்முறைக்கான காரணங்களைக் கண்டறிந்து சரி செய்வதற்காகக் கூட்டப்பட்ட பேச்சு வார்த்தை இல்லை.

அது முற்றிலும் காஷ்மீர் மக்களைப் பற்றி ஓர் இம்மி அளவும் அக்கறை கொள்ளாத வகையிலேயே திட்டமிடப்பட்டிருந்தது.

கடந்த பேச்சு வார்த்தைகளைப் போலவே இந்தப் பேச்சு வார்த்தையும் காஷ்மீர மக்களுக்கு எதிரானதே ஆகும்.

பல்வேறு நிலவுடைமை அரசர்களிடம் கட்டுண்டு கிடந்த பகுதிகளையெல்லாம் தங்கள் வணிக நலனுக்காக ஆங்கிலேயர் இணைத்து அதை இந்தியா என்று உருவாக்கியதும், அப்படியான உருவாக்கத்திற்கு எதிரானவர்களைத் துப்பாக்கி முனையில் நசுக்கியதையும் நாம் வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் உணரலாம்.

அப்படியாக ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்ட இந்தியாவிற்குள் தமிழகத்தின் பெரும் பகுதிகள் இணைக்கப்பட்டதுபோலவே, காஷ்மீரத்தின் பெரும் பகுதிகளும் இணைக்கப்பட்டன.

ஆங்கிலேயன் தான் உருவாக்கிய இந்தியாவை, வணிக நலனில் பங்குபெறுவது என்கிற அளவோடு விட்டுச் சென்றபின்னர், இந்தியா இந்தியப் பார்ப்பனியக் கூடாரத்தின் வேட்டைக் காடாகவும், அதிகாரத்திற்கும் உள்ளடங்கியது.

தமிழக மக்களும், பிற மொழி - இன மக்களும் இந்தியப் பார்ப்பனிய எசமானர்களாலும், வல்லரசியச் சுரண்டலுக்கும் அடிமைப்பட்டுப் போயினர்.

அந்த நேரத்தில் காஷ்மீரை ஆண்டு





வந்த காஷ்மீரியப் பார்ப்பனப் பண்டிட் வகுப்பைச் சார்ந்த ஹரிசிங் என்கிற இந்து வெறி அரசனே காஷ்மீரை இந்தியாவுடன் இணைக்க ஒப்புக் கொண்டான்.


www.padippakam.com
படிப்பகம்

காஷ்மீரத்தில் ஏறத்தாழ எண்பது விழுக்காட்டு மக்கள் இஸ்லாமியர்களாக இருந்தும், பார்ப்பனப் பண்டிட்டுகளே சூழ்ச்சியாக அரசாள நேர்ந்தது.

அதனால், அவர்கள் காஷ்மீரியப் பள்ளத்தாக்குகளில் கூலிவேலை செய்துவந்த பல்லாயிரக் கணக்கான முஸ்லிம் உழவர்களையும் நசுக்கினர். அவ்வகை ஆளுமைப் போக்குக்கு அவர்களுக்கு அன்றைய இந்தியா பெரிதும் துணைநின்றது. சீக்கியப் படையை ஆதரவாக அனுப்பியது.




அதன் காரணமாகவே இந்தியாவோடு ஹரிசிங் காஷ்மீரை இணைத்துக் கொள்ள ஒப்புக் கொண்டான்.

இதைக் காஷ்மீரப் பார்ப்பனப் பண்டிட்டுகள் தவிர்த்த பெரும்பான்மை மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் காஷ்மீர் தனிநாடாக இருப்பதையே வலியுறுத்திப் போராடினர்.

ஆனால், காஷ்மீரிகள் தமிழகத்தின் திராவிடத் தலைவர்களைப் போல் திண்ணையில் படுத்துக் கொண்டு தனிநாடு கேட்டுக் கொண்டிருக்கவில்லை.

இந்திய அதிகார வெறி அரசின் அத்தகைய அடக்குமுறைக்கும் அவர்கள் அஞ்சிவிடவில்லை.

காஷ்மீர் மக்கள் தங்களுக்கான தனி உரிமை அரசை நிறுவப் போராடினர்.

முடிவாக அவர்களுக்கு என்று சில சலுகைகள் அளிக்கப்பட்ட நிலையில் இந்திய அரசியல் சட்டம் திருத்தம் செய்யப்பெற்று காஷ்மீரில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

* *காஷ்மீருக்குள் காஷ்மீரிகள் அல்லாதார் எவரும் நிலம் வாங்க முடியாது என்றும் —*
* *காஷ்மீருக்கெனத் தனிச் சட்டம் வகுக்கப் பெறும் என்றும்,*
* *காஷ்மீர் மக்கள் இந்தியாவுடன் இணைந்திருப்பதா, அல்லது தனி நாடாக இருப்பதா என்பது குறித்தான வாக்கெடுப்பு எடுத்தபின் அதன்படி முடிவெடுக்கப்படும்.*

— என்றுமாக அன்றைய இந்திய அரசு உறுதி கூறியது.

அதன்படி காஷ்மீர மக்களிடையே அவர்களின் தனி நாட்டுரிமைத் தொடர்பான வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று அம்மக்கள் ஓயாமல் குரல் எழுப்பி வந்தனர்.

நேருவும், இந்திராகாந்தியும் தொடர்ந்த இந்தியத் தலைமைகளும் அதை வெவ்வேறு வகையில் மறுத்தே வந்தன.

பின்னாளில், மறுத்து வந்தன என்பது மாறி, மறைத்துவரத் தொடங்கின.

காஷ்மீர் இந்தியாவின் ஒருபகுதி என்பதாகவே அனைவரையும் சிந்திக்க வைத்ததுடன், காஷ்மீர் உரிமை பற்றிப் பேசுவது பிரிவினைவாதம் என்பதாகவும், காஷ்மீர் விடுதலைக்குப் போராடுபவர்கள் பயங்கரவாதிகள் என்பதாகவும் பொய்யுரை பரப்பின.

இதே தன்மையிலேயே பாக்கிஸ்தானும் அம்மக்களை எண்ண வைத்து வருகிறது.

காஷ்மீர் அமைதியானது என்பதோடு அதைப் பாக்கிஸ்தானியரே இந்துக்களுக்கு எதிராகத் தூண்டி அதை வன்முறைக்குள்ளாக்குகின்றனர் என்பதாக இந்திய அரசும்,

இந்தியாவே காஷ்மீரத்தை ஆக்கிரமித்துள்ளது எனவே அதைப் பிடுங்கிப் பாக்கிஸ்தானோடு இணைப்பதுவே பாக்கிஸ்தானிய இஸ்லாமியரின் கடமை என்பதாகப் பாக்கிஸ்தானிய அரசும் போட்டிப் போட்டுக் கொண்டு காஷ்மீர உரிமையைக் கொத்தித் தின்னுகின்றன.

இதில் காஷ்மீர மக்களின் கருத்துகளையும், வாழ்க்கையையும் குழி தோண்டிப் புதைப்பதில் ஒரு அரசு, இன்னொரு அரசுக்குச் சளைத்தவை இல்லை என்பதாகவே நடந்து கொள்ளுகின்றன.

எனவே ஆதிக்க வெறிபிடித்த அரசுகளின் பேச்சு வார்த்தைகள் காஷ்மீரைப் பிடுங்கித் தின்னுவதையே நோக்கமாகக் கொண்டிருக்கிறபோது — அவற்றின் பேச்சு வார்த்தைகள் எப்படி வெற்றி பெற முடியும்.

வெற்றிபெறவே முடியாது.

இன்றைய காஷ்மீரின் நிலவரைபடத்தை இந்தியா, பாக்கிஸ்தான், சீனா ஆகிய மூன்று அரசுகளுமே தங்கள் ஆட்சி வரைபடங்களில் போட்டுக் கொள்ளுகிற வகையில் காஷ்மீர் எந்த அளவு நெருக்கடிக்குள்ளாகியுள்ளது என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும்.

இந்தியாவிற்குள் உள்ள இந்திய வரைபடத்தில் காஷ்மீர் இருப்பதுபோலவே, பாக்கிஸ்தானிய வரைபடத்திலும், சீன வரைபடத்திலும் காஷ்மீர் இருக்கிறது.

ஆக, காஷ்மீருக்குச் சொந்தமற்ற இவர்கள் காஷ்மீருக்காக அலைவதையே காஷ்மீரிகள் எதிர்க்கின்றனர்.

காஷ்மீரின் வடகிழக்குப் பகுதியில் பெரும்பாலும் பௌத்த மதத்தைச் சார்ந்தவர்களே இருக்கின்றனர். எனவே அப் பகுதியை சீனா ஆட்சிவழியே கைப்பற்றி இருக்கிறது. அங்கு சீனா அரசுக்கான பிரதிநிதிகள் இருக்கின்றனர். சீன வரைபடத்தில் அப்பகுதி இணைக்கப்பட்டுள்ளது.

அதேபோல் காஷ்மீரின் வட மேற்குப் பகுதி முழுமையும் பாக்கிஸ்தானிய அரசுக் கட்டுப்பாட்டில் இருக்கிறது. பாக்கிஸ்தானிய அரசுவழி அப் பகுதிக்குத் தனி தலைமை அமைச்சகமே இயங்குகின்றது. தேர்தல் நடக்கின்றது. அப் பகுதி பாக்கிஸ்தான் நில வரைபடத்தில் இருக்கின்றது.

எஞ்சிய பகுதிகள் மட்டுமே இந்திய அரசுக் கட்டுப்பாட்டில் இருக்கிறது. அங்கு இந்திய தேர்தல் நடத்துவதுபோல் அதற்கென்று தனி முதலமைச்சர் இருக்கின்றார்.

இல்லாதபோதும் காஷ்மீரின் முழுப் பகுதியையும் தன் இந்திய வரைபடத்தில் இணைத்துப் போட்டுக் கொள்ளுகிறது இந்தியா. உலக நாடுகள் வெளியிடுகிற வரைபடங்களில் இந்தியப் படம் என்பது வேறுபடியாகவே அமைந்திருப்பதை நாம் கவனித்தாக வேண்டும்.

ஆக, காஷ்மீரத்தை இந்த மூன்று அரசுகளும் பிடுங்கித் தின்னவும், தன் ஆட்சி அதிகாரத்தை நிறுவவும் அலைகிற அலைச்சலால் முழுமையாய் காஷ்மீர மக்களே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

எனவேதான் அவர்கள் எந்த அரசுக்கும் பணியாமல் முழு விடுதலைக்கும் போராடுகின்றனர்.

காஷ்மீர விடுதலைக்குப் போராடுகிற பல்வேறு அமைப்புகள் இருக்கிற அதே சூழலில்,

காஷ்மீரத்தில் உள்ள இந்துப் பண்டிட்டுகள்வழி இயங்குகிற தீவிரவாத இயக்கங்களும், பாக்கிஸ்தான் பின்னணியில் இயங்குகிற இஸ்லாமிய தீவிரவாத இயக்கங்களும் காஷ்மீர மக்களின் உண்மையான போராட்டத்தைச் சீர்குலைக்கின்றன.

www.padippakam.com

தாக்குதல்களும், மதவாதப் போக்குகளும் அதனதன் எதிர் அரசுகளை எதிர்ப்பதாகவே இருக்கிறது.

இவற்றுக்கிடையில் காஷ்மீர மக்களின் உண்மையான விடுதலைப் போராட்டத்திற்கு நாம் முழுமையான ஆதரவைத் தெரிவிப்பதே நம் கடமையாகின்றது.

குறைந்த அளவு அங்குள்ள உண்மை நிலையை பரப்புவதும், இந்தியப் பாக்கிஸ்தானிய பொய் முகமூடிகளைக் கிழித்தெறிவதுமே நாம் அவர்களுக்குச் செய்யும் பெரும் ஆதரவாகும்.

இன்றைக்குக் காஷ்மீருக்குக் கூடுதலாக அதிகாரம் வழங்க இந்தியா கருதுவதாக அத்வானி பேசுகிற பசப்புச் சொற்கள்கூட, காஷ்மீர விடுதலைப் போராளிகளின் இடைவிடாத போராட்டத்தினால் கிடைத்ததே ஆகும்.

ஆனால் இப்பசப்புச் சொற்களுக்கு மயங்காமல் காஷ்மீர விடுதலைப் போராட்டம் முன்னுக்குச் செல்ல வேண்டும்.

வெல்க காஷ்மீர விடுதலைப் போராட்டம்! ❐

# ஆறாத புண்ணுடன் பொன்னூர்

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி வட்டத்தில் உள்ளது பொன்னூர் சிற்றூர். இங்குள்ள இந்து அறநிலைத் துறையைச் சார்ந்த வரதராசப் பெருமாள் மற்றும் திருகாமேசுவரர் கோவில்களுக்கு சொந்தமான ஏறக்குறைய 4.15 ஏக்கர் பரப்பளவுள்ள நீளமான சர்வே எண் 331-அய்யும் இதற்கு கீழே ஏறக்குறைய 1.45 ஏக்கர் பரப்பளவுள்ள வருவாய்த் துறைக்கு சொந்தமான 1918ஆம் ஆண்டிலே பாட்டை புறம்போக்கு என்று வகை நிலமுமான சர்வே எண் 334/1A இருக்கிறது.

இதில் மேற்குறிப்பிட்ட சர்வே எண் 331இல் செங்குந்த முதலியார்கள் காலை நேரங்களில் நெசவு நெய்வது வழக்கம். எஞ்சியிருக்கும் நேரங்களில் இடையர்கள் ஆட்டு மந்தைகளை மடக்குவார்கள். மாலையில் ஜைனர்கள் பால் கறக்கும் இடமாகவும் பயன்படுத்துவார்கள். திருவிழா நாள்களில் மட்டும் ஆதிதிராவிடர்கள் நாடகம் நடத்தியும் வந்தார்கள். சிற்றூரில் இது காலங் காலமாக நிகழ்ந்து வந்தவை தான்.

25.7.89ஆம் நாளன்று ஊராட்சி மன்ற தலைவராக இருந்த மண்ணுசாமி என்பவர் செங்குந்தர்கள் பாவு போடுவதை ஆதிதிராவிடர்கள் தடைசெய்கிறார்கள் என்று கூறி ஆரணி மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் நிரந்தர தடையைப் பிறப்பிக்குமாறு வழக்கு தொடரப்பட்டது. வழக்கு ந.எஸ்.என். 591/1989 ஆகும். இதை ஆய்வு செய்த ஆரணி நீதிமன்றம் 'பாட்டை புறம்போக்கான' 334/1A ஆனது எந்த சமூகத்தினர் வேண்டுமானாலும் பயன்படுத்தலாம். இதற்கு எந்த தடையாணைகளும் இல்லை எனத் தீர்ப்பளித்தது. அதன்படி 8.11.1992ஆம் நாளன்று திருவிழா நடத்த சென்ற தாழ்த்தப் பட்டவர்கள் மீது காக்கிச் சட்டையும், சாதிவெறி பிடித்த அரசியல் கட்சிகளின் சூழ்ச்சியும் அரங்கேறியதை இந்தியத் துணைக் கண்டமே அறிந்ததே.

காவல்துறையின் விலங்காண்டித்தனத்தை மூடி மறைக்கவும் தாழ்த்தப்பட்ட மக்களின் கவனத்தை திசை திருப்பவும் கே.இ. வரதன் விசாரணைக் குழு அமைக்கப்பட்டது, இதனை நேரில் வந்து விசாரணை செய்து 8.1.94ஆம் நாளன்று அரசிடம் அறிக்கையை அளித்தது. அதில், மேற்சொன்ன 'பாட்டை புறம்போக்கு' நிலத்தின் யாதொரு பகுதியையும் யாதொரு பயன்பாட்டிற்காகவும் அந்த கிராமத்தின் காலனிகளில் வசிக்கும் ஆதி திராவிடர்கள் உட்பட யாதொரு நபருக்கும் தேவையான அனுமதி வழங்க சம்பந்தப்பட்ட வருவாய் துறை அதிகாரிகளுக்கு எவ்வித தடையும் இல்லை என குறிப்பிட்டுள்ளது.

ஆனால் இதுநாள்வரையிலும் 6 ஆண்டுகள் ஆகியும் வருவாய் துறை அனுமதி மறுக்கிறது. விசாரணைக் குழு பரிந்துரைப்படி 14.1.94ஆம் ஆண்டு திருவிழா நடத்த ஆதிதிராவிடர்கள் முற்பட்டபோது 63 நபர்களை கைது செய்து பொய் வழக்கு போட்டதால் 6 ஆண்டுகளாக நீதிமன்றம் சென்று வருகின்றனர். அரசும் இதைப்பற்றி கண்டு கொள்வதும் இல்லை. ஏற்கெனவே பலமுறை காவல் துறையாலும் அரசாங்கத்தாலும் நசுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் கூடிய விரைவில் நிரந்தர தீர்வு காண முயன்று வருகிறார்கள்.

இனியும் வருவாய்த் துறை கண்டு கொள்ளாமல் இருந்தால் பல குடிநாயக(ஜனநாயக) சக்திகளை ஒன்றிணைத்தும், தாழ்த்தப்பட்டோர் இயக்கங்களை ஒருங்கிணைத்தும் போராட்டம் நடத்துவது அல்லாமல் வேறுவழியில்லை.



படிப்பகம்

www.padippakam.com

# அன்புத் தோழனுக்கு

நம் இயக்கத்தின் செயற்பாடுகள் மட்டுமல்ல, நம் தொடர்புகளும் மெலியத் தொடங்கியதுதான் எனக்குப் பெரு வருத்தம். உனக்கும் அந்த வருத்தம் இருக்கும்.

நமக்குள் ஏற்படுகிற சோர்வுகள் நம் உணர்வழுத்தத்திற்கு வேலைகள் நடைபெறவில்லையே என்பதல்லாமல் வேறென்னவாக இருக்க முடியும்.

நம் எதிரிகள் சுறுசுறுப்பாக இருக்கிற அளவைக் காட்டிலும் பன்மடங்குச் சுறுசுறுப்பான உணர்வுகள் நமக்கு உண்டு. ஆயினும் நம் செயல்கள் அவ்வாறு இல்லாததற்கு நாம் வருத்தப்படலாமே அல்லாமல் நாம் சோர்ந்துபோய்விட முடியாதுதானே.

புரட்சி என்பது பொழுதுபோக்கானதும், எளிமையானதும் இல்லை என்பது நமக்குத் தெரிந்தது தான், ஆனால் அந்தக் கடினமானப் பணியை எப்படி நாம் சோர்வில்லாமல் செய்வது என்பதில்தான் நாம் பழக வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இக் குமுகத்தை மக்கள் நலனுக்கான குமுக அமைப்பாக மாற்ற வேண்டுமான புரட்சித் தீயே இக் குமுகத்தை மாற்றிவிட முடியாது.

இக் குமுகம் திடுமென இன்றைக்கு இந்த நிலையில் உருவெடுத்து நின்றுவிடவில்லை. இன்றைய முதலாளிகளேகூட இக் குமுகத்தை அவர்களுக்கான குமுகமாக உருவாக்கிக் கொண்டுவர படிப்படியாக நீண்ட காலம் கட்டமைத்திருக்கிறார்கள். அப்படி அவர்களுக்காக, அவர்களின் கொள்ளைக்காகக் கட்டமைக்கப்பட்ட இக் குமுக அமைப்பைப் பிறர் எளிதாக மாற்றிவிட அவர்கள் விட்டுவிடுவார்களா என்ன?

எனவேதான் அவர்களுக்கான, அவர்களின் கொள்ளை நலனுக்கான இக் குமுக அமைப்பை, மக்களுக்காக மக்கள் நலனுக்காக மாற்ற வேண்டுமானால் நாமும் நீண்ட நெடிய காலம் திட்டமிட்டு உழைக்க வேண்டியிருக்கிறது.

இவ் உழைப்பு நம்மால், நம்போன்ற அமைப்புகளின் முயற்சியால் வெல்லக்கூடியதாகவே இருக்கும்.

ஆனால் அத்தகைய வெற்றி முயற்சிக்கு நம் அமைப்புகளிடையே ஒருங்கிணைப்பு என்பதும் மிகவும் தேவையானது.

ஒருங்கிணைப்பு என்று கூறுகிறபோது, நாம் பல செய்திகளை மறந்துவிடக் கூடாது.

ஒற்றுமைக்கு அடித்தளம் நாம் மேற்கொள்ளுகிற கொள்கை அரசியல் கோட்பாடுகளே ஆகும்.

இன்றைக்கு முன் எப்பொழுதைக் காட்டிலும் ஒற்றுமைப் பற்றி பலரும் பேசத் தொடங்கினாலும், அவ் ஒற்றுமையின் தேவையையோ, பயனையோ புரிந்து கொள்ளாமலே அவ்வாறு பேசுகின்றனர் என்பதே கண்கூடாகத் தெரிகிறது.

ஒருபக்கம் ஒற்றுமை பற்றிப் பேசப்படுகிற அதேபொழுது, மறுபக்கம் அமைப்புகளிடையே உடைவுகளும் சிதைவுகளும் ஏற்படுவதை நீ பார்த்து வருவாய் என எண்ணுகிறேன்.

ஒற்றுமைப்படுவதற்குக் கொள்கைக் கோட்பாடு எந்த அளவு முழுமையாய் அறியப்பட வேண்டுமோ, பேசப் பெற வேண்டுமோ, அந்த அளவு வேற்றுமைப்படுவதற்கும் அவ்வாறு பேசப் பெற வேண்டும் அல்லவா?

ஆனால் இப்பொழுதெல்லாம் அவ்வாறு பேசப்படுகின்றதா என்றால் இல்லைதானே.

முன்னர் திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து வந்திருந்த இயக்கங்கள் ஒன்றுகூடிப் பேசி ஓரமைப்பாக மாறுவதற்குத் தடை ஏற்பட்டதற்கான காரணமும், இன்றைக்கு அவை ஒன்று சேர்ந்து ஓரமைப்பாக மாறியதற்குமான காரணமும் பெரிய வேறுபாடுடையவை இல்லை என்பதை நீயும் அறிவாய் அல்லவா?

அதேபோல்தான் முன்னர் விடுதலைக் குயில்கள் அமைப்பைக் கலைத்துவிட்டுத் தமிழ் தமிழர் இயக்கமாக ஒருங்கிணைய ஏற்பட்ட காரணமும், பின்னர் தமிழ் தமிழர் இயக்கத்திலிருந்து தமிழர் தேசியக் கழகமாய்ப் பிரிய ஏற்பட்டக் காரணமும் பெரிய கோட்பாட்டளவுச் சிக்கலுடையவை இல்லை என்பதை ஆழ்ந்து பார்த்து விளங்கிக் கொள்ள முடியும்.

இங்கு இவ் வமைப்புகளின் சேர்க்கைக்கும், விலகலுக்கும் கோட்பாடு பெரிய காரணமாய் இருந்தது போலவே நடைமுறையும் காரணமாய் இருந்தது என்பதே உண்மை.

பிரிவதற்கான காரணமாக நடைமுறையில் நிறைவின்மை இருந்தது போலவே, இவ் வமைப்புகளுக்குள் தொடர்ந்து பிரிவுகள் ஏற்படவும் கோட்பாடுகளும் நடைமுறைகளும், காரணமாகத் தொடர்ந்தால் என்ன செய்வது என்பதில் அவர்களுக்கு அக்கறை இல்லை.

கோட்பாடுகளே நடைமுறைகளை நெறிப்படுத்துவதாக இருக்கிறபோது, கொள்கை கோட்பாடுகளில் அவை அழுத்தம் கொள்ளாமல் போவதே இவ் விலகல்களைத் தொடரச் செய்யும் அல்லவா?

எதிரான போராட்டங்கள் எத்தகையது என்பதிலும், அப் போராட்டத்தின் நட்பு சக்திகள் எவை என்பதிலும், அவற்றிடையே எவ்வாறு நட்பை மேற்கொள்ளுவ்து என்பதிலும், அந் நட்புக்கிடையில் திறனாய்வுகளை எப்படிச் செய்துகொள்வது என்பதிலும் இவ் வமைப்புகள் தெளிவற்று போவதுதான், திடுமெனவான சேர்க்கையும், திடுமெனவான விலகலும் ஏற்படக் காரணமாக உள்ளன.

www.padippakam.com

இன்றைக்குத் தமிழ்த் தேசியம் குறித்தும், அதன் அமைப்பாளர்கள் குறித்தும், தமிழகப் பொருளியல் அரசு உரிமைகள் தொடர்பான அதிகாரங்களை வென்றெடுப்பது என்பது குறித்தும், அரசியலாக இவ் வமைப்புகள் கலந்தாய முன்வராதபோது. இவைகளுக்கிடையில் எப்படி ஒற்றுமை நிலவ முடியும்.

ஓர் அமைப்பை இன்னொரு அமைப்பு விழுங்க நினைப்பதும், தலைமை வழிபாட்டு நோய்க்குள் சிக்கி ஒரு தலைவரை இன்னொரு தலைவர் விஞ்ச நினைப்பதுமே ஒற்றுமையாகிவிட முடியுமா என்ன?

உலகில் உள்ள ஒவ்வொரு தேசிய இனமும் குறைந்த அளவு தன் தேசிய அடையாளங்களை யாவது இன்னது என்று அறிந்துகொண்டு, எநத அடையாளத்தின் கீழாவது ஒன்று சேர்ந்திருக்கிற போது, தன் தமிழ்த் தேசிய அடையாளங் களுக்காகக் கூட இவ் வமைப்புகள் தங்களுக்குள் ஒன்று சேர்கிற ஒரு ஒத்த அரசியல் இல்லை.

தமிழர் என்பதும், பார்ப்பனரைத் தமிழர் இல்லை என்பதும், தமிழகத்தில் உள்ள பிற மொழியைத் தாய்மொழியாகக் கொண்டோரையும் தமிழர் என்பதும் — இல்லை அவர்கள்தாம் நம் இரண்டகர்கள் அவர்களை விரட்டி அடித்தால்தான் நமக்கு விடுதலை என்பதுமான குழப்பங்கள் அல்லவா இவர்கள் இவர்களின் தேசிய இனத்தைக்கூடச் சுட்டிச் சொல்லிக் கொள்ளாமல் இருப்பதற்கான பெருந்தடைகள்.

அன்புத் தோழனே,

மிக வருத்தத்தோடு, மீண்டும் மீண்டும் இதை எழுதவேண்டி இருக்கிறது. ஒற்றுமை என்பது உதட்டளவு செய்தி அல்ல.

அது நம் வாழ்க்கைச் செய்தி. போராட்ட வாழ்க்கைச் செய்தி. ஆம் விடுதலைக்கான போராட்ட வாழ்க்கைச் செய்தி.

விடுதலைக்கான போராட்டத்தில் அக்கறை இருக்கிறபோதுதான், அப் போராட்ட வாழ்க்கையை மேற்கொள்ள முடியும். அப் போராட்ட வாழ்க்கையை மேற்கொள்ளுகிற போதுதான் அப் போராட்டத்திற் கான அரசியலிலும், நடைமுறையிலும் அக்கறை கொள்ளவும் முடியும், அவ் வகை அக்கறை உள்ளவர்களோடு ஒருங்கிணையவும் முடியும்.

தோழனே, அவ் வகை அக்கறையை ஊட்டுவதற்கான கடமையே இன்று நம்முள்தான் இருக்கின்றது. அதைத் தொடர்ந்தும், விரைந்தும் ஆற்ற வேண்டுமல்லவா.

தோழமையுடன்,

**வேட்பன்**

# தந்தை பெரியார் திராவிடர் கழகம்.

மிகுந்த ஏற்பாடுகளுடன் சிறப்பாகக் கடந்த 11.8.2001 அன்று சென்னையில் தந்தை பெரியார் திராவிடர் கழகத் தொடக்க விழா நடைபெற்றது.

கொளத்தூர் மணி அவர்களைத் தலைவராகவும், கோவை இராமக்கிருட்டிணன், விடுதலை இராசேந்திரன் ஆகியோரைப் பொதுச் செயலாளர்களாகவும் ஏற்றுக் கொண்ட அவ் விழாவுக்கு ஏராளமான இளைஞர்களும், பெண்களும் கலந்து கொண்டனர்.

வெள்ளை வண்ணத்தில் உள்ளொட்டி, கையுரை, கால் சட்டை என்பதோடு கருப்பு மேல் சட்டைகளை உடுத்திக் கொண்டு ஏராளமான தோழர்கள் பேரணியில் அணிவகுத்து வந்தது பார்க்கக் கவருகிற வகையில் இருந்தது.

நிகழ்ச்சிகளைப் பொறுத்த அளவில் சிறப்பாக இருந்த அக் கழகத்தின் உள்ளடக்க அரசியலில் வேறுபாடு இருப்பதாகத் தெரியவில்லை.

சாதி ஒழிப்பு குறித்து நிரம்பவே பேசப் பட்டாலும், சாதி ஒழிப்புக்கான வரையறுத்தத் திட்டங்கள் பேசப் பெறவில்லை. இட ஒதுக்கீட்டால், பார்ப்பன ஆளுமையை எதிர்த்து விடலாம் என்பதுபோலவும், கலப்புத் திருமணத்தில் சாதியத்தை ஒழித்துவிடலாம் என்பது போலவுமான பேச்சுகளே வெளிப்பட்டன.

சாதியக் கட்டுமானத்துக்கும் அரசுக்கும், இந்தியப் பார்ப்பனியத்துக்குமான தொடர்புகளை விளக்கி, இந்தியத்தை உடைக்காமல் சாதியம் ஒழியாது என்கிற அரசியல் புரியப்படவில்லை.

தன்னெழுச்சியாகத் தோழர்கள் சிலர் 'தமிழ்நாடு தமிழருக்கே!' என அட்டைகளை நெற்றியிலே கட்டிக் கொண்டு பேரணியில் சென்றாலும், தமிழ்நாடு எப்படி விடுதலை ஆகும் என்பது குறித்தான நோக்கம் அக் கழகத்தில் எந்த அளவு முன்வைக்கப்படுகிறது என்புதில் தெளிவில்லை.

திராவிடர் கழகத் தொண்டர்களை வீரமணியி டமிருந்து விடுதலை செய்து ஒருங்கு திரட்டிய வகையில் த.பெ.தி.க. பாராட்டுதலுக்கு உரியதே ஆயினும் அது தான் மேற்கொள்ளுகிற தெளிந்த உறுதியான அரசியல் வழியிலேயே போராட்டக் கழகமாக மாறிட முடியும்.

முகிழ்த்து வரும் தமிழ்த் தேசம் பற்றியும், அதன் விடுதலை தொடர்பாகவும் அக்கறை செலுத்துவதும், திராவிடர் மாயையை விட்டொழிப்பதும் அதன் கடமையாகும்.

இந்தியத்தை எதிர்ப்பது திராவிடம் அல்ல, தமிழியமே என்பதில் தெளிவுபடவும் வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

# இந்திய சுதேசிகளையும் விரட்டாம

"உலகிலேயே முதலீடு செய்வதற்குச் சிறந்த பகுதி இந்தியாதான். அங்குக் கிடைக்கும் வசதிகள் மகிழ்ச்சியளிப்பதாக உள்ளன. இந்தியாவின் பொருளாதாரம் சிறப்பான வகையில் முன்னேறி வருகிறது. தொடர்ந்து முன்னேறும். முதலீடு செய்வதற்குப் பல வாய்ப்புகள் உள்ளன. அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளாவிட்டால் நமக்குத்தான் நட்டம்".

— என்று அண்மையில் பிரிட்டனின் மிகப் பெரிய தொழிலதிபரான லார்ட் சுவராந் பால் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

எந்த பிரிட்டன் தெரியுமா?

"வெள்ளையனே வெளியேறு!" என்று ஆங்கிலேயனை வெளியேற்ற கத்தினார்களே அந்த வெள்ளையன்தான் இன்றைக்கு இந்த அறிக்கையை வெளியிட்டிருக்கிறான்.

1947-இல் காந்தி 'சுதந்திரம்' வாங்கிக் கொடுத்துவிட்டதாகப் பலரும் நம்பிக் கொண்டிருக்கிறார்களே — அப்படி எதுவும் வாங்கப்படவும் இல்லை — எதுவும் கொடுக்கப் படவும் இல்லை என்பதுதான் இந்த அறிக்கைவழி தெரிகிறது.

அன்றைக்கு நேரடியாக ஆட்சி செய்து கொள்ளையடித்து எடுத்துக் கொண்டு போய்க் கொண்டிருந்த வெள்ளைக்காரன்—

இன்றைக்கு அவன் கொள்ளைக்கு உகந்த சட்டத்தை இந்தியப் பார்ப்பனிய பனியா கும்பலை வைத்துப் போட்டுக் கொண்டு அதேபோல் கொள்ளையடித்துக் கொண்டுதான் செல்கிறான்.

அன்றைக்கு அவன் கொள்ளைக்காக நிறுவப்பட்ட 'காட்பரீஸ்' தொழிலகம், யூனிலீவர் நிறுவனம், வேலண்ட் போன்ற தொழிலகங்கள் இன்றைக்கும் அவன் கொள்ளைக்காக நடந்துகொண்டுதான் இருக்கின்றன.

ஆனால், அன்றைக்கோ பிரிட்டிசின் வெள்ளைக்காரன் மட்டும்தான் கொள்ளையடித்துக் கொண்டு போனான்.

இன்றைக்கு அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மனி, பிரான்சு, சீனா, ரஷியா போன்ற எல்லா கொள்ளையர்களுமே கொள்ளையடிப்பதற்கான வழியை சுதந்திர(!) இந்திய அரசாங்கம் திறந்து விட்டிருக்கிறது.

"இந்தியனாய் இரு இந்தியப் பொருளை வாங்கு" என்று கூக்குரலிடுகிற இவர்களால் இந்தியப் பொருள் என்று எதைச் சொல்ல முடியும்.

உள்ளூரில் விற்பனை செய்து கொண்டிருந்த சோடாத் தொழில்களைக்கூட மூடிவிட்டு, பெப்சிக்கும், கொக்கோ கோலாவின் விற்பனையைத் திறந்துவைத்திருப்பதுதானே அவர்களின் இந்திய சாதனை.

சிவகாசி தீப்பெட்டித் தொழிற்சாலைகளைக்கூட இழுத்து மூடிவிட்டு, உலகமயமாக்கம் எனும் பெயரில் வெளிநாட்டுத் தீப்பெட்டித் தொழில்களை இறக்குமதி செய்வதன் மூலம் இலக்கக் கணக்கான கூலித் தொழிலாளர்களின் வயிற்றிலடிக்கிற வேலையைத்தானே இந்தியப் பார்ப்பனிய அரசாங்கம் செய்கிறது.

உள்நாட்டளவில் தொழில் செய்ய முனைபவர்களின் முகத்திலே குத்தி அவர்களை வீழ்த்துகிறவர்கள்தானே இன்றைக்கு 'சுதேசி' தொழில் வளத்தைப் பற்றி வாய்கிழிய பேசுகிறார்கள்.

இந்த இந்திய, பாரதீயங்களின் சுதேசிகளால் ஏதாவது ஒரு வெளிநாட்டுத் தொழிலகவழிக் கொள்ளைகளையாவது தடுத்து நிறுத்த முடியுமா? அல்லது விரட்டித்தான் அடித்துவிட முடியுமா?

நல்ல ஊதியத்தில் இயங்கிக் கொண்டிருந்த அலுமினியம் தொழிலகத்தை தனியார்மயமாக்கம் எனும் பெயரில் 'ஸ்டெர்லைட்' என்கிற வெளிநாட்டுக் குழுமத்திற்கு விற்றுவிட்டு, அதில் பணி செய்கிற பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்களையும் வீட்டிற்கு அனுப்புகிற வேலையை அல்லவா இந்த பாரதீய சுதேசிகள் செய்திருக்கின்றனர்.

ஆயிரம் பேருக்குள் தொழிலாளர்களாக இருந்தால் அந்தத் தொழிலகத்தை எப்போது வேண்டுமானால் இழுத்து மூடவும், அந்தத் தொழிலாளர்களை வீட்டுக்கு அனுப்பவுமான சட்டத்தை இயற்றி, உள்நாட்டுத் தொழில் வளத்தையே சாகடிக்கும் இந்தக் கொள்ளையர்களையா நாம் சுதேசியர்கள் என்பது.

இவர்கள் சுதேசியத் தொழிலாக எதைத் தான் அனுமதிக்கிறார்கள்?

**இந்த இந்திய, பாரதீயங்களின் சுதேசிகளால் ஏதாவது ஒரு வெளிநாட்டுத் தொழிலகவழிக் கொள்ளைகளையாவது தடுத்து நிறுத்த முடியுமா? அல்லது விரட்டித் தான் அடித்துவிட முடியுமா?**



படிப்பகம்

தவிர்த்து இவர்களின் சுதேசிப் பொருள்கள் எதையாவது இவர்களால் காட்ட முடியுமா? விளைச்சல் செய்கிற வேளாண் பொருள்களைக்கூட இன்றைக்கு வெளிநாட்டுத் தொழிலகங்கள் அல்லவா உற்பத்தி செய்து கொடுக்கின்றன.

இவன் பயிரிட்டுக் கொண்டிருந்த விதையெல்லாம் இன்றைக்கு இல்லாமல் வீரிய விதைகள் என்கிற பெயரில் வெளிநாட்டுக் கொள்ளையர்களிடமல்லவா நாம் கையேந்துகிறபடி செய்துவிட்டார்கள்.

எங்கு பார்த்தாலும் 'கார்' தொழிலகங்கள், கணிப்பொறித் தொழிலகங்கள் என்று திறந்து இவற்றில் கிடைக்கிற இலாபங்களாக நம் நாட்டு விளைச்சல் பொருள்களையல்லவா கொள்ளையடித்துக் கொண்டு போகிறார்கள்.

வேலை வாய்ப்பும் நமக்கு இல்லை. நம் விளைச்சல் பொருள்களும் நமக்கு இல்லை. கண் எதிரே எல்லாம் விளைந்தாலும் அவற்றை நாமே விளைவித்தாலும் நமக்கு அவை இல்லை என்று ஆகிவிட்டது.

பெரும் பெரும் கட்டடம் கட்டுகிறவன் எப்படி அங்கு குடியிருக்க முடியவில்லையோ, தங்கத்தை வெட்டி எடுத்து வெளிக் கொண்டு வருகிறவனுக்கு தங்கத்தை வாங்கும் திறன் இல்லையோ—

அப்படி விளைச்சலைக்கூட உழைப்பவனால் பெற வழி இல்லாமல் அல்லவா இந்தக் கொள்ளையர்கள் செய்துவிட்டார்கள்.

பொருள்கள் இருக்கும், ஆனால் அவை நமக்கானவை அல்லாமல் வெளிநாட்டுக் கொள்ளையர்களுக்கானவை என்று நாம் கையடங்கி, வாய்பொத்தி, மூச்சடங்க வேண்டுவதாக அல்லவா இந்த இந்தியப் பார்ப்பனிய 'சுதேசிகள்' நம்மை ஆக்கி வைத்திருக்கிறார்கள்.

இவற்றோடு அல்லாமல், வெளிநாட்டுப் பொருள்களை இறக்குமதி செய்வதில் இந்த அரசு காட்டுகிற ஆர்வம் கொஞ்ச நஞ்சமல்ல.

வெளிநாட்டுப் பொருள்களின் இறக்குமதிக்கு வரிவிலக்கு அளிக்கிற இந்தச் சுதேசிகள் இங்கிருந்து ஏற்றுமதி ஆகிற பொருளுக்குப் பலநூறு விழுக்காடு ஏற்றுமதி வரியை விதிக்கின்றனர்.

இதனால் இங்கு உற்பத்தி ஆகிற பொருளைக் ... குறைந்த விலையில் இங்கு விற்க வழி செய்கின்றனர்.

எனவே உள்நாட்டுப் பொருள் முடங்கிப் போகிறது. உள்நாட்டுச் சரக்கை இந்த அரசே புறந் தள்ளிவிட்டு, மறுபுறம் நாங்கள் 'சுதேசிகள்' என்று பொய் வேடம் போடுகின்றன.

இந்தியப் பார்ப்பனிய அரசுகளின் இந்தப் போக்கினால் வெங்காயம், சர்க்கரை, பழ வகைகள் போன்றவைகூட வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன.

விளைச்சல் பொருள்களும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதால் உள்நாட்டுக் காய்கறிகளுக்கும், பழங்களுக்கும் தங்களின் செலவு, கூலிக்குக் கூட கட்டுப்படியாகாமல் அவற்றை உழவர்கள் தெருக்களில் கொட்ட வேண்டியிருக்கிறது.

உழவனின் எரிகிற வயிற்றுக்கு ஈரத்துணி மட்டுமே வழியாகப் போகின்றது.

இப்படியாக நம்மை அடிமைப்படுத்தி வைத்திருப்பதிலிருந்து நாம் எப்போது மீளப் போகிறோம்.

அடிமைகளாக வறுமையிலேயே உழன்று சாகப் போகிறோமா?

உரிமையோடு — நலத்தோடு வாழப் போகிறோமா?

இந்த வெளிநாட்டுக் கொள்ளையர்களையும், அவர்களுக்குச் சாமரம் வீசி வரவேற்கிற இந்தியப் பார்ப்பனிய வெறியர்களையும் எதிர்த்துப் போராடினால்தான் நம் வாழ்க்கையை மீட்க முடியும்.

அவர்களின் அதிகாரக் கொட்டத்தை விரட்டாமல், நம் உரிமை வாழ்க்கையை மீட்க முடியாது.

உழைக்கும் மக்கள் நாம் அணிசேராமல் அவ் உரிமைப் போராட்டத்தைத் தொடங்க முடியாது.

உழைக்கும் மக்களே நாம் அணிதிரள வேண்டாமா?

வெளிநாட்டுக் கொள்ளையர்களை மட்டுமல்ல 'இந்திய சுதேசிகள்' எனும் கொள்ளையர்களையும் விரட்டாமல் நமக்கான விடிவு எப்படி கிடைக்கும்?

**பொருள்கள் இருக்கும் ஆனால் அவை நமக்கானவை அல்லாமல் வெளிநாட்டுக் கொள்ளையர்களுக்கானவை என்று நாம் கையடங்கி, வாய் பொத்தி, மூச்சடங்க வேண்டுவதாக அல்லவா இந்த இந்தியப் பார்ப்பனிய 'சுதேசிகள்' நம்மை ஆக்கி வைத்திருக்கிறார்கள்.**



www.padippakam.com
படிப்பகம்

# இந்திய சாணக்கியம் நசுக்கும் நாகலாந்து, மணிப்பூர் விடுதலைப் போராட்டங்கள்.

www.padippakam.com

'ஊரு ரெண்டு பட்டா கூத்தாடிக்குக் கொண்டாட்டம்' என்பது ஊர்ப்புற பழமொழி.

ஆனால் ஊரை இரண்டாக்கிக் கொட்டமடிப்பதையே நாம் சாணக்கிய சூழ்ச்சியாக உணர்கிறோம்.

இந்தியப் பார்ப்பனியம் தன் அதிகார வெறி அரசைக் கையில் வைத்துக் கொண்டு தொடர்ந்து இத்தகைய பணிகளையே செய்துவருகிறது.

இதன்வழி தன் பார்ப்பனியக் கல்லைக் கொன்று இரண்டு தேசிய இனங்களை வீழ்த்துவது என்பது மட்டும் அல்ல, தானும் தன்னளவில் எதிரி இல்லை என்பதாகவும் காட்டிக் கொள்ளவும் செய்கின்றது.



இத்தகைய நடவடிக்கைகளுக்கு இந்திய அரசை ஆட்சி செய்த எந்தத் தலைமை அமைச்சரும் யாருக்கும் யாரும் சலைத்தவர்கள் இல்லை.

ஒருவருக்கு ஒருவர் ஒருபடிமேலேயே சென்று இத்தகைய சிண்டு முடிகிற வேலையைச் செய்தனர்.

காஷ்மீர, சீக்கிய இனத்தவர்களுக்கு இடையிலும், அசாம் போடோ இனங்களுக்கு இடையிலும், வங்காள கூர்க்க இனங்களுக்கு இடையிலும் சிண்டு முடிந்த இந்தியப் பார்ப்பனிய அரசின் தொடர்ந்த சாணக்கிய சூழ்ச்சிதான் நாகலாந்து – மணிப்பூர் இனங்களுக்கு இடையிலான மோதல்.

பரந்து விரிந்த நாகலாந்து இனமக்களின் தேசத்தை அடிமைப்படுத்தி இந்தியாவுடன் இணைத்ததோடு அல்லாமல், நாகலாந்தைத் தனித்த மாநில அரசு என்று மாநிலப் பகுப்பை வேண்டுமென்றே குழப்பிப் பிரித்தது இந்தியா.

எப்படி பெரும்பகுதி தமிழர்கள் வாழும் பகுதிகளான கோலாரையும், நெல்லூரையும் தேவிகுளம், பீர்மேட்டையும் அண்டைத் தேசங்களுக்குக் கொடுத்து இந்திய அரசு பிரித்ததோ அப்படி நாகலாந்து மக்கள் பெரும் பகுதி வாழுகிற பல பகுதிகளையும் மணிப்பூருக்கும், அசாமுக்கும், அருணாசலப் பிரதேசத்திற்கும் எனப் பிரித்துக் கொடுத்தது.

இந்தியாவோடு இணைக்கப்பட்ட வன்மைப் போக்கிற்கே உடன்படாத நாகலாந்து மக்கள் விடுதலை இயக்கம் பிரிக்கப்பட்ட நாகப் பகுதிகளை ஒன்றிணைக்க வேண்டுமானக் கோரிக்கையையும் முன்வைத்துப் போராடி வருகின்றது.

மணிப்பூர் தங்கள் இன உரிமைக்கான விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டியது கட்டாயமான போது, அவர்களை நாகலாந்துக்கு எதிரான சிந்தனையோடேயே வளர்த்தது இந்தியப் பார்ப்பனியம்.

போடோக்களை அசாமுக்கு எதிராகவும், கூர்க்கர்களை வங்காளத்துக்கு எதிராகவும் போராட எப்படி இந்தியப் பார்ப்பனியம் திசை திருப்பியும் ஊட்டியும் வளர்த்ததோ, அப்படியே மணிப்பூரையும் நாகலாந்திற்கு எதிராக வளர்த்தது.

அதன்மூலம் நாகலாந்து – மணிப்பூர் இன மக்களுக்கு இடையிலான முரண்பாட்டை வளர்த்துவிட்டுத் தான், அதில் குளிர்காய்கிறது இந்தியா.

எனவே இதனை எதிர்க்க வேண்டிய கடமையை இரண்டு இன விடுதலை இயக்கங்களும் பெற்றாக வேண்டுவது கட்டாய மாகின்றது.

இரண்டு தேச விடுதலை இயக்கங்களும் தங்களுக்குள் விரிவாகப் பேசி ஓர் அமைவுக்கு வர வேண்டுமே அல்லாமல், அதில் இந்தியாவை இணைத்துக் கொள்வது அந்தத் தேசிய இனங்களுக்கே எதிரானதாக முடியும்.

இந்தியப் பார்ப்பனியத்தின் தோளுரிக்காமல் இந்தியாவில் அடைபட்டுக் கிடக்கிற தேசிய இனங்களுக்கு விடுதலை இல்லை.

*



படிப்பகம்

www.padippakam.com

# தன்னுரிமை விவாதம் - தொடரட்டும்

"கருத்துரிமை போன்ற ஒரு ஜனநாயக உரிமைதான் தன்னுரிமை என்று சில தோழர்கள் கூறுகிறார்கள். இறையாண்மையுள்ள ஓர் அரசை உருவாக்கும் முழக்கம், ஒரு புரட்சிகர முழக்கமே தவிர, கருத்துரிமை போன்ற ஜனநாயக முழக்கமல்ல. **சுயநிர்ணயம் வேறு சுயநிர்ணய உரிமை வேறு** என்றும் அவர்கள் வாதிடுகிறார்கள். சுயநிர்ணயம் என்றால் பிரிந்து போவதைக் குறிக்கும்; சுயநிர்ணய உரிமை என்றால் ஒரு கூட்டாட்சிக்குள் கட்டாயம் இருந்துகொண்டு அவ்வுரிமையைக் கருத்துரிமை போலப் பெற்றிருப்பதைக் குறிக்கும் என்று அவர்கள் கூறுகிறார்கள்"

(அழுத்தம் - நாம்) என்று 1997 பிப்பிரவரியில் த.தே.பொ.க.வின் பொதுச் செயலர் தோழர். பெ. மணியரசன் அவர்கள் எழுதியபோது யாரந்தச் சில தோழர்கள் என எழுத்து ஐயத்தை 1999ஆம் ஆண்டு செப்டம்பரில் தன்னுரிமை விவாதக் குறிப்பின் வழியாய்த் தீர்த்து வைத்தார் தமிழ் தமிழர் இயக்கப் பொதுச் செயலாளர் தோழர் தியாகு. அதன்பின் இரண்டாண்டாக நீடித்து வருகிற மேற்கூறிய விவாதத்தைப் பற்றிய சில கருத்துகளை இக் கட்டுரை முன்வைக்கிறது.

தோழர் தியாகு தமது விவாதக் குறிப்பில் மூன்று கருத்துகளை முன்வைக்கிறார்.

1. தன்னுரிமை என்கிற சொல் Right to self - determination எனும் சொல்லுக்கான சரியான தமிழ்ச் சொல்லல்ல, 'தன் தீர்வு உரிமை, தன்னுறுதி உரிமை' எனும் இரு தமிழாக்கத்தில் ஒன்றைக் கொள்ளலாம்.

2. தன்னுறுதி அல்லது தன் தீர்வு வேறு தன்னுறுதியுரிமை அல்லது தன்தீர்வு உரிமை வேறு.

3. தன்னுறுதி அல்லது தன்தீர்வு அல்லது சுயநிர்ணய என்பது ஒரு புரட்சியின் தூலக் குறிக்கோள் ஆகாது.

இதில் முதலிரண்டு கருத்துகள் விவாதிக்கப் பட்ட அளவிற்கு மூன்றாவது கருத்து விவாதிக்கப் படவில்லை என்பதோடு மூடிமறைக்கப்படுகிறது என்றே கூறலாம். சுயநிர்ணயமும், சுயநிர்ணய உரிமையும் ஒன்றுதான் எனக் கூறுவதற்காகப் பாடுபட்டவர்கள். சுயநிர்ணயம் எவ்வகையில் புரட்சியின் தூலக் குறிக்கோள் ஆகிறது என்பதை மெய்ப்பிப்பதற்காக எவ்வகையான முயற்சியையும் செய்துவிடவில்லை.

**சுயநிர்ணயம் எவ்வகையில் புரட்சியின் தூலக் குறிக்கோள் ஆகிறது என்பதை மெய்ப்பிப்பதற்காக எவ்வகையான முயற்சியையும் செய்துவிடவில்லை.**

1999 செப்டம்பர் தமிழ்த் தேசம் இதழில் தன்னுரிமை விவாதக் குறிப்பை வெளியிட்ட தோழர். தியாகு 1999 அக்டோபர் இதழில் சமூக நீதி பற்றிய விவாதக் குறிப்பையும் வெளியிட்டார். அவ் விவாதக் குறிப்பில் தாம் முன்னிறுத்தும் (அப்போது தோழர் தியாகு மட்டும்) புரட்சியின் தூலக் குறிக்கோளை தமிழ்த் தேசிய சமூக நீதிக் குடியரசு என்று வகைப்படுத்தியிருந்தார்.

இருந்தும் அதன்பின் விவாதத்தில் பங்கேற்ற பலரும் தன்னுரிமை எனும் சொல்லிற்குக் கொடுத்த முகாமையைப் புரட்சியின் தூலக் கோள் குறித்த செய்திக்குத் தந்துவிடவில்லை.

அப்படியாயின் சொல்பற்றி விவாதிக்கவே கூடாதா எனக் கேட்கலாம். வேண்டும்தான். ஒவ்வொரு சொல்லையும் விண்டு பிளக்கக் கூடாது என்பதில்லை. விண்டு பிளக்கலாம். அதே நேரத்தில் எதற்காக அந்தச் சொல்லை விண்டு பிளந்தோமோ அது, அந்தக் குறிக்கோள் பற்றிய விவாதம் மறைந்தொழிந்துவிடக் கூடாது. தன்னுரிமை விவாதத்தில் இறுதியாக வந்த தோழர் தியாகுவின் விடை, சுயநிர்ணயம், சுயநிர்ணய உரிமை ஆகிய சொற்களை வெவ்வேறு பொருளில் தோழர் இலெனின் பயன்படுத்திய இடங்களைப் பட்டியலிட்டுவிட்டு "சில" மறுப்புரைக்க வேண்டுமென விரும்புவார்; ஆனால் எப்படி, ஏன், என்ன காரணத்துக்காக என்பதை அறியார்" என முடிந்துள்ளது.

தோழர் தியாகுவை இப்படியான முடிவுக்கு இட்டு வந்ததில் த.தே.பொ.க. தோழர் வெங்கட்ராமன் அவர்களுக்குப் பெரும் பங்குண்டு. ஒருவேளை தோழர் வெங்கட்ராமன் அவர்கள் விரும்பியது இதுவாகக் கூட இருக்கலாம். தன்னுரிமை விவாதக் குறிப்பு பற்றிய தமது முதல் கட்டுரையில் "தில்லியின் கைகளிலிருந்தும் தமிழ்த் தேசத்தின் இறையாண்மையை - அரசதிகாரத்தை கைப்பற்றுகிற தமிழ்த் தேசத் தன்னுரிமைப் புரட்சியே இன்றைய சட்டத்தின் தமிழகப் புரட்சி ஆகும். தமிழ்த் தேசக் குடியரசு நிறுவுவது என்பதன் பொருளும் அதுதான்.

தன்னுறுதி வேறு, தன்னுறுதி உரிமை வேறு, தன்னுரிமை வேறு, தமிழ்த் தேசக் குடியரசு வேறு, தன்னுறுதி வேறு, புரட்சியின் தூல இலக்கு வேறு என்றெல்லாம் கூறி இல்லாத வேறுபாட்டைத் தேடி களைத்துப் போக வேண்டாம் என்பதே



படிப்பகம்

வேண்டுகோள்.

அவர் இந்த விவாதத்தை எந்த இலக்கு நோக்கி வைக்கிறார் என்பதையும் இதுவரை விளக்கவில்லை தன்னுறுதி என்பதையாவது அவர் முன்வைக்கிறாரா? "தமிழகச் சூழலில் தேசியத் தன்னுறுதிக்கான போராட்டம் எவ்வாறு தூல வடிவெடுக்கிறது என்பதைத் தனியாக ஆராய வேண்டும்" என்று மட்டும் குறிப்பிடுகிறார்.

ஆராயட்டும்; சொல்லட்டும் அப்போதுதான் மேலும் விவாதிக்க உதவியாக இருக்கும்" என்று அழுத்தந்திருத்தமாய்க் குறிப்பிட்டார்.

ஆனால் அதற்கடுத்து வந்த தமிழ்த் தேசத்தில் தோழர் தியாகு "புரட்சிகர நீதியை அடைவதற்காக நாம் நடத்துவது சமூக நீதிப் புரட்சி! இந்தப் புரட்சியின் மூலமாக நாம் நிறுவுவது சமூக நீதிக் குடியரசு!

தமிழ்த் தேசியத்திற்கும் சமூக நீதிக்குமான இடையுறவைக் கருத்தில்கொண்டு சமூகநீதியுடன் தமிழ்த் தேசியத்தையும் இணைத்துச் சொல்கிறோம்; தமிழ்த் தேசிய சமூக நீதிப் புரட்சி! தமிழ்த் தேசிய சமூக நீதிக் குடியரசு! என்றவாறு தூல வடிவத்தைச் சுட்டிக் காட்டியபோதும்.

அதுகுறித்து தமது விவாதத்தை முன் வைக்காது இலெனின் சுயநிர்ணயம், சுயநிர்ணய உரிமை என்கிற இரு சொற்களையும் ஒரே பொருளில் தான் பயன்படுத்தினார். எனவே தன்னுரிமையை நாங்கள் விடமாட்டோம் என்கிற வகைப்பாட்டிலேயே தமது விவாதத்தை இறுதிவரை தொடர்ந்தார் தோழர் வெங்கட்ராமன். இதனால்தான் "நமக்கு எல்லாமே மாஸ்கோவிலிருந்துதான் வரவேண்டும் என்பதில்லை" என்றும் தோழர். சுப.வீ. கடிந்து கொண்டாரோ என்னவோ தெரியவில்லை.

ஆயினும் மேற்கூறிய செய்திகளைக் கொண்டு 'தன்னுரிமை', குறித்த விவாதத்தைப் புறக்கணித்து விட்டு தமிழ்த் தேசிய சமூக நீதிக் குடியரசு பற்றி விவாதிக்கலாம் எனும் முடிவுக்கு வந்துவிட இயலாது. 'தமிழ்த் தேசிய சமூக நீதிக் குடியரசு' விவாதிக்க இயலாது.

**தன்னுரிமை சொல்லிற் பிழையா?**

"சுயநிர்ணய உரிமை Right to self-determination என்பதைத்தான் தன்னுரிமை என்று தமிழ்ப்படுத்தியுள்ளனர். தனக்கு வேண்டிய பொருண்மிய, அரசியல் பண்பாட்டு வாழ்வை உறுதி செய்துகொள்ளவும், தேவையானால் பிரிந்து சென்று தனியரசு அமைத்துக் கொள்ளவும் ஒவ்வொரு தேசம் அல்லது தேசிய இனத்துக்கும் சிக்கல் ஒன்றுமில்லை.

சுயநிர்ணய உரிமை Right to self-determination என்பதில் இரு கூறுகள் உள்ளன. ஒன்று சுயநிர்ணயம் self-determination, இரண்டு அதற்கான உரிமை. The right to that ஒரு செயலும் அதைச் செய்வதற்கான உரிமையும் ஒன்றல்ல. மண முறிவு என்பதும் மண முறிவுக்கான உரிமை என்பதும் ஒன்றல்ல. சுயநிர்ணய உரிமையைக் குறிப்பிட்ட வழியில் செயலாக்குவது சுயநிர்ணயம். உரிமை வேறு. அதன் செயலாக்கம் வேறு.

'தன்னுரிமை' என்ற தமிழாக்கத்தில் மேற்சொன்ன வேறுபாடு அடிபட்டுப் போகிறது. தன்னுரிமை என்பது சுயநிர்ணயமா? அல்லது சுயநிர்ணய உரிமையா? உரிமை என்று முடிவதால், அது சுயநிர்ணய உரிமையைக் குறிப்பதாகத் தான் கொள்ளவேண்டும். இடத்தைப் பொறுத்து இரு பொருளிலும் அதை ஆள்வது கருத்துக் குழப்பத்துக்கே வழி செய்யும்.

> **தன்னுறுதி வேறு, தன்னுறுதி உரிமை வேறு, தன்னுரிமை வேறு, தமிழ்த் தேசக் குடியரசு வேறு, தன்னுறுதி வேறு, புரட்சியின் தூல இலக்கு வேறு என்றெல்லாம் கூறி இல்லாத வேறுபாட்டைத் தேடி களைத்துப் போக வேண்டாம் என்பதே தோழர் தியாகுவுக்கு நாம் முன் வைக்கும் வேண்டுகோள்.**

'சுயநிர்ணய உரிமை' என்பதை 'தன்னுறுதி உரிமை' என்று பாவலரேறு பெருஞ்சித்திரனாரும், 'தன் தீர்வு உரிமை' என்று பேராசிரியர் மருதமுத்துவும் தமிழ்ப்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது. தன்னுறுதி அல்லது தன்தீர்வு என்பது 'சுயநிர்ணயம்' – self-determination செயல், செயலுக்கான உரிமை என்ற இரு கூறுகளையும் தெளிவாகக் கொண்டிருப்பதால் இந்த இரு தமிழாக்கங்களில் ஒன்றை வைத்துக் கொள்ளலாம்.

இது தோழர் தியாகுவின் விவாதம்.

சுயநிர்ணய உரிமை எனும் வடமொழி கலந்த சொல்லுக்குத் தன்னுரிமை எனுஞ்சொல் பொருத்த மற்றது என்பதில் இருவேறு கருத்திற்கு இடமிருக்க முடியாது. எனினும் தோழர் சுப.வீ. சொல்வது போன்று அதனை ஒரு கலைச் சொல்லாக self-determination என்கிற சொல் எவ்வகைப் பொருள் தருகிறதோ அதே பொருளை (சுருங்கி நின்று விரிந்த பொருளை) தரக்கூடிய ஒரு சொல்லாகப் பயன்படுத்த இயலுமா என்பதே கேள்வி.

சுயநிர்ணய உரிமை எனுஞ் சொல் அரசியல் துறை சார்ந்த சொல் என்பதில் எவருக்கும் மறுப்பிருக்க இயலாது. ஆக இச்சொல்லுக்கு மாற்றான தன்னுரிமை எனுஞ்சொல் அதன் அரசியல் அர்த்தத்தை தர மறுக்குமேயானால் அதனை எவ்வகையிலும் சரியான சொல்லாக்கமாக எடுத்துக் கொள்ளவியலாது.

ஒரு குறிப்பிட்ட தேசம் தனது அரசியல், பொருளியல், பண்பாட்டு வாழ்வை தானே முடிவு



www.padippakam.com
படிப்பகம்

'தன்னுரிமை' என்கிற சொல்லைப் புரிந்துகொள்ள இயலாதுதான். அதேபோல் சுயநிர்ணய உரிமை, தன் தீர்வுரிமை, தன்னிலைத் தீர்வுரிமை, தன் முடிவுரிமை, தன்னுறுதியுரிமை எனும் சொற்களும் கூட அச் சொற்கள் தனித்து நிற்கையில் ஒரு தேசம் தன் வாழ்வைத் தானே முடிவுசெய்து கொள்கிற உரிமை என்கிற பொருளைத் தந்து விடுவதில்லை.

**தேசத் தன்னுரிமை, தேசத் தன் தீர்வுரிமை, தேசத் தன்னுறுதியுரிமை** என்கிற சொற்களும் அப் பொருளைத் தருகிறதா என்பதை நோக்குகிற போது இச் சொற்களும் அவ்வகையான பொருள் தராது நிற்பதோடு அதுவா? இதுவா? எனும் மயக்கத்தையும் தருகிறது.

ஒரு தேசத்தின் பண்பாட்டுரிமையா, அரசியல் உரிமையா, பொருளியல் உரிமையா எனும் மயக்கத்தை வரவழைக்கிறது.

அப்படியெல்லாம் மயங்கத் தேவையில்லை. 'தன் தீர்வுரிமை' என்றாலே ஒரு தேசம் தனது **அரசியல், பொருளியல், பண்பாட்டு** வாழ்வைத் தானே தீர்மானித்துக் கொள்ளுகிற உரிமைதான். அப்படித் தான் அதைப் புரிந்துகொள்ளவேண்டும் என்றால் 'தன்னுரிமை'யையும் அப்படிப் புரிந்து

இருக்கிற விரிந்த பொருள் விளக்கம். அதாவது தன் தீர்வு - உரிமை என்கிற செயல் செயலுக்கான உரிமை என்கிற பொருளடர்த்தி அதில் இல்லை என்றால் 'தன்தீர்வுரிமை' என்பதிலும் எதைத் தீர்வு செய்துகொள்ளுதல் எனும் பொருளடர்த்தி இல்லை. தேசத் தன்தீர்வுரிமை என்றாலே தேசத்தின் அரசியல், பொருளியல், பண்பாட்டு வாழ்வை தீர்மானித்துக் கொள்ளுகிற உரிமைதான் என்று சொன்னால் அதைவிடக் கொஞ்சம் மிகையாக - 'தேசத் தன்னுரிமை என்றால் அது தன் அரசியல் பொருளியல் பண்பாட்டு வாழ்வை தானே தீர்மானித்துக் கொள்கிற உரிமை தான் என்றும் சொல்ல முடியும்.

மேலும் சுயநிர்ணய உரிமை, Self-Determinc ஆகிய சொற்களும்கூட மேற்சொன்னவகையில் குழப்பமான சொற்களாக மாறிவிடுகின்றன. இலெனின் ருஷ்ய மொழியில் இதற்கு எச் சொல்லை பயன்படுத்தினார் என்பதை அறியோம். நல்லவேளையாக நாமும் ருஷ்ய மொழி கற்கவில்லை.

ஆக, சிக்கல் சொல்லுக்குள் இல்லை. சொல்லுக்குள் இருப்பதுபோல் வேறொரு இடத்தில் இருக்கிறது.

(தொடரும்)

# வீரமணியின் ஆசியின்கீழ் தமிழக அரசே செய்யும் யாகங்கள்!

'இந்திய' நடுவணரசோ பல்கலைக் கழகங்களில் கட்டாயம் வேத சோதிடத்தை ஒருபாடமாக்க ஏற்பாடு செய்கிறது.

அதன் குடுமியில் சிக்கியுள்ள தமிழக அரசோ யாகங்களை நடத்திக் கொண்டுள்ளது.

சென்னைக் குடிநீர் வாரியத் தலைமையகம் சிந்தாதிரிப்பேட்டையில் கடந்த 16.7.2001 அன்று நிர்வாக இயக்குநர் நிரஞ்சன் மார்டி முன்னிலையில் மழை வேண்டி யாகம் நடந்துள்ளது.

அனைத்துப் பணியாளர் ஒருங்கிணைந்த கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் வி. ஞானசேகரன் இதற்கு ஏற்பாடு செய்துள்ளார்.

அதேபோல் பங்காரு அடிகளார் நடத்திய வேள்வியிலும் குடிநீர் வடிகால் வாரியத் தலைவர்கள் அரசு சார்பில் கலந்து கொண்டுள்ளனர்.

இது என்ன தமிழக அரசின் குடிநீர் வாரியமா? அல்லது ஆரியப் பார்ப்பனர்களின் யாக சாலையா?

இதுதான் மதச் சார்பற்ற கூட்டணியின் சாதனையா?

'திராவிடத்தின் வித்து' அம்மா ஆட்சியின் சோதனையா?

அண்ணா பொதுநிர்வாகம் பணியாளர் சங்கத்தினரும் இதற்கு துணை போயுள்ளனர்.

இனி எதற்கும் கவலைப்பட வேண்டியதில்லை.

குடிநீரா? மழை வேண்டி யாகம்.

வெள்ளச் சேதமா? மழை நிற்க ஒரு யாகம்.

நில நடுக்கமா? பூமாதேவிக்கு ஒரு யாகம்.
இப்படி எங்கும் யாகங்கள் செய்ய அரசு அலுவலகத்தில் யாக சாலைகள்.

திராவிடர் கழகத் தளபதி வீரமணியின் ஆசியில் நடக்கிற ஆட்சியில்தான் குருவாயூருக்கு யானை தானம்... ஊரெல்லாம் மழை வேண்டி யாகம்... என்னே வேடிக்கை.

ஊரில் இருக்கிற ஏரிகளையெல்லாம் தூர்த்துவிட்டு அதன்மேல் உட்கார்ந்துகொண்டு மழைக்காக யாகம் செய்கிற இந்த முட்டாள்கள்தாம் மதச் சார்பற்ற அணியினர்களா?

வீரமணிக்குப் பிடித்திருக்கிற மூடநம்பிக்கைப் பேயை முதலில் ஓட்ட வேண்டியிருக்கிறது.

திராவிடக் கழகத்தவர்கள் அதைச் செய்வார்களா?

# ஆதிக்கச் சாதி வெறித்தனமும், ஆங்கில வெறித்தனமும் வைத்த தமிழ்வழிப் பள்ளிக்கூடத்துக்குத் தீ!

www.padippakam.com

தமிழ்நாட்டில்தான் இது நடந்திருக்கிறது. 1965இல் தமிழ்வழிதான் கல்வி கற்போம் என்று வீறு கொண்டு எழுந்து இந்தி ஆதிக்க வெறியை எதிர்த்து, அன்றைய அரசதிகாரங்களைத் தீயிட்டுக் கொளுத்திய தமிழகத்தில்தான் இன்றைக்கு இப்படி நடந்திருக்கிறது.

ஆம், தமிழ்வழிப் பள்ளிக்கூடத்தைத் தீயிட்டுக் கொளுத்தியிருக்கிறார்கள்.

கொளுத்தியவர்கள் எல்லாம் இந்திய அரசதிகாரத்தின்படி தேச பக்தர்கள்.

தமிழ்வழிக் கல்விக்கு முழங்குபவனும், தாய்மொழிவழி படிக்க வேண்டிப் போராடுபவனும்தான் தமிழ்வெறியர்களாம். எவ்வளவு பெரிய அடிமைகள் நாம்.

கருநாடகாவில் ஒரு கன்னடப் பள்ளிக் கூடமோ, ஆந்திராவில் ஒரு தெலுங்குப் பள்ளிக் கூடமோ உத்திரப்பிரதேசத்தில் ஒரு இந்தி மொழிப் பள்ளிக்கூடமோ எரிக்கப்பட முடியுமா? உலகில் எங்கும் அப்படி நடந்திட முடியாது. பொள்ளாச்சிக்குப் பக்கத்தில் காளியப்பக் கவுண்டன்புதூரில் கடந்த சில கிழமைகளுக்கு முன்தான் தமிழ்வழிப் பள்ளிக்கூடத்தை அந்த ஆதிக்கச் சாதி — ஆங்கில வெறி ரவுடிகள் கொளுத்தினார்கள்!

அந்தப் பேரூராட்சித் தலைவியின் கணவர் வரதராசன் கவுண்டர்தான் அத்தனைத் திமிருடன் நடந்துகொண்டவர்.

கரு. நாகராசன் என்பவர் தாய்த்தமிழ்ப் பள்ளியை அமைத்துச் சிறப்புற நடத்திவருவதைக் கண்டு மனம் பொறுக்காமலும், தன் சாதியத் திமிருக்குச் சான்றாகவும் தமிழ்வழிப் பள்ளிக்கூடத்தை ஆள் வைத்து எரித்திருக்கிறார்கள்.

ஆயினும், அந்த ஊர் மக்கள் தமிழ்வழிப் பள்ளிக்கும், அதை நடத்தி வருகிற தோழர்களுக்கும் பெருமளவில் ஆதரவாக இருப்பதால் உடனடியாக மக்களே தொகை திரட்டி அப் பள்ளிக்குக் கூரையைக் கட்டித் தந்துள்ளனர்.

ஆனால், இதுவரை பள்ளிக்கூடத்தைத் தீயிட்டுக் கொளுத்திய அந்த வரதராசக் கவுண்டர் மீது எத்தகைய நடவடிக்கையையும் அரசு எடுத்துவிடவில்லை.

தமிழக மக்களே நாம் சிந்திப்பது எப்போது?

ஆதிக்க வெறிப் போக்குகளுக்கு எதிராக அணிதிரளாமல் இவற்றையெல்லாம் மாற்ற இயலாது.

*

# சிவாஜிகணேசன் என்கிற தமிழகக் கலைஞர்.

கலை மக்களின் உணர்வுகளோடு பிணைந் திருப்பது. தெருக் கூத்துகள் நாடக வடிவில் வளர்ச்சிபெற்று வெகுமக்களைக் கவரக் கூடிய திரைப்படமாக உருமாறியபோது வழக்கம் போல பார்ப்பனிய உணர்வுகளும் ஊடுருவலும் அதற்குள் நிகழ்ந்தது. அந்தக் காலக் கட்டத்தில் தன்னுடைய நடிப்பாற்றலால் தமிழக மக்களின் உணர்வுகளோடு கலந்து போனவர்தான் சிவாஜி. எத்தனை சூழ்ச்சிகள் செய்தும் அவருடைய நடிப்பை வீழ்த்த முடியாத பார்ப்பனியம் ஓரளவு அவரைத் தங்கள் கருத்துகளைச் சொல்லும் ஊடகமாக மட்டும் மாற்றிக் கொண்டது. பார்ப்பனியப் படங்கள் பலவற்றுள் நடிக்கவைத்து வெற்றி கண்டது.

ஆனால் அவரை முழுக்க முழுக்கத் தங்களது ஊதுகுழலாக மாற்றிக் கொள்ளமுடியவில்லையே என்கிற எரிச்சல் அவர்களுக்கு இருக்கவே செய்தது. அதனால்தான் இந்தியப் பார்ப்பனியத்தின் இழிந்த விருதான 'பாரத ரத்னா'வைக் கொடுக்காமலேயே தள்ளிக் கொண்டு வந்தனர். பிரான்சு அரசு 'செவாலியர்' பட்டம் கொடுத்ததைப் பாராட்டி விழா எடுக்காமல் ஒதுக்கிவிட்டனர்.

அவருக்கோ பாரத ரத்னா கிடைக்க வில்லையே என்கிற ஏக்கத்தைவிடப் பெரியாராகத் தாம் நடிக்கவில்லையே என்கிற ஏக்கம்தான் பெரிதாக இருந்தது.

பெரியாராக நடிப்பதே தன்னுடைய இறுதி இலக்கு என்கிற தன்னுடைய கருத்தைப் பல நேரங்களில் அவர் வெளிப்படுத்தி அவரை வைத்துப் பெரியாரைப் பற்றி படத்தை எடுப்பதற்கு அனைத்து வாய்ப்புகளும் உள்ள திராவிடர் கழகமோ அதற்கு ஏதும் முயற்சி இன்றி ஒதுக்கி விட்டது.

செயலலிதாவைத் திராவிட இயக்கத்தின் வாரிசு என்று பெரியார் வேடம் போட்டுப் பார்ப்பதில் அதற்கு இருந்த அக்கறை இதில் இல்லை.

அந்த் மாபெரும் கலைஞன் கோல்வால்கராக நடிக்க விருப்பம் தெரிவித்திருந்தால் ஆர்.எசு.எசு. இயக்கம் திராவிடர் கழகத்தைப் போல தட்டிக் கழித்திருக்குமா?

இந்தியப் பார்ப்பனியத்தால் முழுக்க உட்செரிக்க முடியாமல் இருந்துகொண்டிருக்கும் கலைஞர்களை நமக்கானவர்களாக பயன்படுத்திக் கொள்ளாதது அவர்களுக்கு ஏற்படுகிற இழப்பு என்பதைக் காட்டிலும் தமிழகத்திற்கே பெரும் இழப்பு.

அதுபோன்ற இழப்புகளைச் செய்யாமல் அவரவர்களின் திறமைகளை தமிழ்மண்ணுக்குப் பயனாக்குவது என்பதே சிவாஜிகணேசனைத் தமிழக மக்கள் உண்மையில் நினைவு கூர்வதாக அமையும்.

*



படிப்பகம்

www.padippakam.com

# பாரதீய சனதா - ம.க.இ.க. போன்ற சுதேசிகள் உணர்வார்களா?

வெளிநாட்டு மூலதனங்களுக்கு உலகம் முழுக்க உள்ள சிறு நாடுகளெல்லாம் அடிமைகளாகிக் கிடக்கின்றன.

அப்படி அடிமைகளாகிக் கிடக்கிற பகுதிகளிலேயே மக்கள் தொகை அதிகமுள்ள பகுதி இந்தியாதான்.

இந்தியப் பார்ப்பனிய அரசுக்கு அடிமைப்பட்டிருக்கிற மக்கள் தொகையே இன்றைய உலக பணக் கொழுப்பெடுத்த நாடுகளைப் பெரிதும் சார்ந்திருக்கிறது.

அன்றைக்குக் 'கிழக்கிந்தியக் கம்பெனி'வழி எப்படி வணிகத்திற்கு வெள்ளையன் வந்து கொள்ளையடித்தானோ —

அதேமுறையில்தான் வணிக வழியும், தொழிலகங்களை நிறுவுவது என்பதன்வழியும் அவன் உருவாக்கிய இந்த இந்தியாவில் கொள்ளையடிக்க வெள்ளையன் மட்டுமல்ல எல்லா வெளிநாட்டுக்காரர்களும் நுழையத் தொடங்கிவிட்டனர்.

வெள்ளையனின் தொழில்வழி - வணிகவழி கொள்ளை நலனுக்கு என ஏற்படுத்தப்பட்ட 'இந்தியா' இன்றைக்கு எல்லோருக்குமான கொள்ளை நிலமாகக் கிடக்கிறது.

வெள்ளையன் 47-இல் சுதந்திரம் கொடுத்துவிட்டுப் போனதாய் நடந்த நாடகத்தில், அவனின் நாடகப் பாத்திரத்தை ஏற்று நடிக்க வந்த இந்தியப் பார்ப்பனியக் கொள்ளையர் கள்தான் இந்த வெளிநாட்டுச் சுரண் டலுக்குப் பாய்விரித்து இந்தியாவில் உள்ள செல்வத்தையும், உழைப்பின் வழியான விளைச்சலையும் விற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

வெள்ளையனின் வணிகச் சந்தைக்கென உருவாக்கப்பட்ட இந்தியாவுக்குப் பூணூல் போட்டு இவர்களின் இந்துப் பார்ப்பனிய அமைப்புக்கான இந்தியாவை அமைத்துக் கொண்டனர்.

ஆக, இவர்களின் இந்தியாவுக்குப் பூணூலும், பிள்ளையாரும் இந்தியாவைக் கட்டி வைக்கிற பொருள்களே தவிர, அதில் வணிகம் செய்வதும், கொள்ளையடிப்பதும் இந்தியப் பார்ப்பனியத்துக்கும், அதன் பிள்ளையாருக்கும் பால் வார்க்கிற வெளிநாட்டுக்காரர்கள்தாம்.

ஆக, வெளிநாட்டினர் கொள்ளைக்காக இந்தியா என்பதை ஏதோ ஒருவகையில் கட்டிக் காப்பதே இந்தியப் பார்ப்பனியத்தின் கடமையாகிவிட்டது.

இந்தியாவுக்கு என்று பழம் வரலாறு இருக்கிறது என்றும் தத்துவங்கள் இருக்கிறது என்றும் ஆரியப் பார்ப்பனியத்தின் வேத புராண வரலாற்றையும், அதன் தத்துவங்களையும் இந்தியாவில் உள்ளடக்கப் பட்டிருக்கிற மக்கள் அனைவருக்குமான வரலாறாகவும், தத்துவமாகவும் சொல்லிப் பொய்யுரைக்கிறது இந்தியப் பார்ப்பனியம்.

**ஆர்.எஸ்.எஸ். எதிர்ப்பில்லாத முழக்கங்கள்!**
**அடக்கி வாசித்த ம.க.இ.க.வினர்!**

**ஒருபக்கம் அனைத்து அந்நிய கம்பெனிகளையும் உள்ளேவிட்டு இந்தியத்தின் பெயரால் தமிழ்நாட்டைக் கொள்ளையடிக்கும் இந்துத்துவ ஆர்.எஸ்.எஸ். கும்பல் 'சுதேசி விழிப்புணர்வு இயக்கம்' என்கிற பெயரில் சுதேசி நாடகமாடி கோவையில் வேர்ப்பிடித்துள்ள நிலையில் ஆர்.எஸ்.எஸை. எதிர்த்தோ இந்துத்துவ எதிர்ப்புடன் பிணைத்தோ எந்தவொரு முழக்கமும் எழுப்பாமல் பேரணியை நடத்தி முடித்தனர்.**

**இறுதியுரையாற்றிய தோழர்: மருதையனோ ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் புண்பட்டுவிடாமல் இரண்டொரு வார்த்தைகள் மட்டும் சொல்லி வைத்தார்.**

**ஒருவேளை நாளை வல்லரசிய எதிர்ப்பு என்கிற பெயரில் தொழிலாளிகள், விவசாயிகள், தேசிய முதலாளிகள் வரிசையில் ஆர்.எஸ்.எஸ்ஸோடும் கூட்டுச் சேரவேண்டியிருக்கும் என்று அடக்கி வாசித்தார்களோ?**

**இந்தியக் கட்டமைப்பை எதிர்க்காத வல்லரசிய எதிர்ப்பு இந்துத்துவ எதிர்ப்பில் சாரமிழந்து போவதற்கு இது ஒரு சான்று!**

இந்தியாவுக்கென்று ஒரு வரலாறு என்பதே இல்லை. அப்படி அதற்குள்ள வரலாறு எல்லாம் வெள்ளைக்காரன் இங்கு வந்து தன் ஆட்சி நலனுக்காக உருவாக்கிய இந்தியா என்பதன் வரலாறு மட்டும்தான்.

அதற்கு முன்னர் இந்தியா என்று ஒன்று இருந்திருக்கவே இல்லை என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

அப்படியாக இன்றைக்கு உருவாக்கப்பட்டிருக்கிற வல்லரசிய, பார்ப்பனிய இந்தியாவுக்குள் பல்வேறு தேசிய இனங்கள் நீண்ட வரலாறு கொண்டதாக இருந்ததும், அவை இன்றைக்குத் தேசமாக வளர்ந்து இந்தியப்


படிப்பகம்

பார்ப்பனிய வல்லரசியததுககு அடிமைப பட்டிருப்பதையும் நாம் உணர்தல் வேண்டும்.

www.padippakam.com

## காணாமல் போன கவுண்டர் !

மாநாட்டு நிகழ்ச்சி நிரலில் இடம்பெற்றிருந்தவர்களில் ஒருவர் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த கிருஷ்ணசாமிக் கவுண்டர்.

ம.க.இ.க.வினரிடம் தன்னுடைய பெயரில்கூட ஆதிக்கச் சாதிப் பெயரை இணைத்து வைத்துள்ள ஒருவரை எப்படி மாநாட்டுக்கு அழைத்தீர்கள் என்று வினவினோம். "இல்லீங்க தோழர், அவரு வந்து வல்லரசிய எதிர்ப்புல தெளிவா இருக்கிறதா சொல்றாரு. சும்மா ஒரு கௌரவத்துக்குத்தான் சாதிப் பெயரை வெச்சுருக்கிறதாகவும் சாதி வெறியெல்லாம் கிடையாதுன்னு அவரே சொல்றாரு. சாதிப் பெயர் போட்டுத்தான் ஆகணும்னு பிடிவாதமாக சொல்லிட்டாரு. அதனால நாங்களும் இது வல்லரசிய எதிர்ப்புப் போராட்டம்தானே சாதிய என்னத்துக்கு பார்க்கணும்னு கண்டுக்காம வுட்டுட்டோம்" என்று பதில் சொன்னார்கள். திடீரெனப் பார்த்தால் அதற்குப் பிறகு வந்த துண்டறிக்கையில் கவுண்டரைக் காணவில்லை. வெறும் கிருஷ்ணசாமி மட்டும் இருந்தார்.

மறுபடியும் அவர்களிடம் 'கவுண்டர்' எங்கேன்னு கேட்டோம். 'இல்லீங்க தோழர், சுயவிமர்சனம் பண்ணிகிட்டோம் தோழர்' என்று தங்களது சந்தர்ப்பவாத நிலைப்பாட்டினை சுயவிமர்சனம் என்கிற பெயரில் மூடிமறைத்தார்கள். வெளிப்படையாகத் துண்டறிக்கைகளில் இடம்பெற்றிருந்த பெயரை ஏன் மாற்றிக் கொண்டீர்கள் என்றால் அந்த சுயவிமர்சனத்தை குறைந்தபட்சம் அவர்களது இதழ்களின் மூலமாக வெளிப்படுத்தியிருக்கலாம் அல்லவா!

வர்க்கமும் சாதியும் பின்னிப் பிணைந்துள்ள தமிழ்ச் சமூகத்தில் சாதியை மறந்துவிட்டு வல்லரசிய எதிர்ப்பைச் செய்வோம் என்று வாய்ச்சவடால் அடிப்பது அவர்களின் அரசியலில் உள்ள சந்தர்ப்பவாதத்தையே காட்டுகிறது!

அவ்வளவு அரும்பாடுபட்டு அழைக்கப்பட்ட ஆதிக்கச் சாதிக் கவுண்டரோ கடைசியில் மாநாட்டுக்கே வராமல் காணாமல் போய்விட்டார்!

ஆக, அந்நிலையில் இந்தியா என்பதை ஒரு தேசம் என்று யாரேனும் ஒப்புக் கொண்டால் அது பூணூல் வழிப்பட்ட இந்தியப் பார்ப்பனியத்தின் அடிவருடிச் சிந்தனையே அல்லாமல் வேறில்லை.

ஒரு தேசம் என்பது ஒரு பொதுவான மொழியையும், பொதுவான நில ஆட்சிப் பகுதி, பொதுப் பொருளியல் வாழ்வு என்பதோடு அல்லாமல் அவற்றுடன் இணைந்த மன இயல்புகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வரலாற்று வழிப்பட்டு உருவாகிய நிலையான மக்கள் குமுகம் என்பதை நாம் உணர்ந்திருக்கிறபோது, இப்படியான தன்மையில் உள்ள பல்வேறு தேசங்களை உள்ளடக்கி ஒடுக்கி வைத்திருக்கிற இந்தியா என்பது அரசே அல்லாமல் இன்னும் சொன்னால் வல்லரசிய நலனுக்கும் இந்தியப் பார்ப்பனிய நலனுக்கும் துணையாயிருக்கிற ஒரு துணை வல்லரசே அல்லாமல், அதை ஒரு தேசம் என்பதும், இன்னும் சொன்னால் ஒரு நாடு என்று கூறுவதும் எவ்வளவு பெரிய ஏமாற்று.

எனவே, இந்தியாவைத் தேசம் என்று ஏற்பதும், நாடு என்று ஒப்புக்கொள்வதும்கூட பார்ப்பனியத்தின் சார்புத் தன்மையே அல்லாமல் வேறென்னவாக இருக்க முடியும்.

அண்மையில் மக்கள் கலை இலக்கியக் கழகத்தினர் கோவையில் நடத்திய 'மறுகாலனி ஆதிக்க எதிர்ப்பு மாநாட்டிற்'கும், அதற்கு முன்னர் பாரதீய ஜனதா கட்சி அதே கோவையில் நடத்திய 'சுதேசி விழிப்புணர்வு மாநாட்டிற்'கும் பொருளியல் அடிப்படையில் அல்லாமல், தேச அடிப்படையில் நாட்டை வரையறுப்பதில் எந்த வேறுபாடும் இல்லை.

முன்பு (புதிய ஜனநாயகத்தில்) தம் தேசிய இனம் என்பதையே 'இந்தியன்' என்று எழுதித் தம் பூணூல் அடையாளத்தைக் காட்டிக் கொண்டிருந்த ம.க.இ.க.வினரை இடித்துரைத்தப் பின்னர் தேசிய இனம் 'தமிழர்' என்று அவர்கள் மாற்றி எழுதிக் காட்டினாலும் அதை அரசியல் அளவில், வரலாற்றளவில், பொருளியல் அளவில் நடைமுறைப்படுத்திக் காட்டுவதற்கு அவர்களுக்கு இந்தியப் பூணூல் அல்லவா தடையாக இருக்கிறது.

தாங்கள் நடத்துகிற தமிழ் மக்கள் இசைவிழாவின் முழக்கமாகத் "தமிழில் பாடு இல்லையேல் தமிழ்நாட்டை விட்டு ஓடு" என்று முழங்கக் கூடியவர்கள் இன்றைக்கு "அமெரிக்காவுக்கு நாட்டை அடிமையாக்காதே!" என்பதன்வழி எந்த நாட்டை அடிமையாக்க வேண்டாம் என்கிறார்கள்?

இங்கு நாட்டை என்பதை இந்திய நாட்டை என்று குறிப்பிடுகிற வகையில் இந்தியாவை நாடு என்று இவர்கள் ஒப்புக் கொண்டால் தமிழில் பாடாமல் பிற மொழியில் பாடக் கூடியவர்களை ஏன் தமிழ்நாட்டிலிருந்து ஓடச் சொல்ல வேண்டும்.

தெலுங்கில் பாடுபவன் தமிழ்நாட்டை விட்டு ஓட வேண்டும் என்றால், தமிழில் பாடுபவன் ஆந்திரத்திலிருந்தும், கருநாடகாவிலிருந்தும், பம்பாயிலிருந்தும் ஓடவேண்டியதுதானே முறை.

இது, இந்தியாவை நாடு என ஒப்புக் கொள்ளுகிற இவர்களுக்குத் தமிழ்நாடும் வேண்டும் இந்தியப் பூணூலும் வேண்டும் என்பதான பாம்புக்குத் தலையையும், மீனுக்கு வாலையும் காட்டுகிற சந்தர்ப்பவாதத்தனம் இருப்பதல்லாமல் வேறென்ன?

அமெரிக்காவுக்கு நாட்டை அடிமையாக்காதே! என்று முழங்குகிற இவர்கள் மறுகாலனியாதிக்க எதிர்ப்புக்காக உழவர்களையும், தொழிலாளர்களையும், தேசிய முதலாளிகளையும் அழைக்கிறார்களே.

அந்த உழவர்களுக்கும், தொழிலாளர்களுக்கும், தேசிய முதலாளியர்க்கும் ஆன நாட்டை இந்தியா


படிப்பகம்

என்று காட்டுகிற இவர்களின் தேசிய முதலாளிகள் எந்த தேசியத்தவர்கள். www.padippakam.com

## தேசிய உள்ளீடு இல்லாத சோப்புத் தயாரிப்பு!

மாநாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட கோத்தகிரி தேயிலையை விளம்பரப்படுத்தும்போது "செயற்கை மணம், நிறம் சேர்க்கப்படாத தேசியத் தேயிலையின் சுவையைப் பருகுங்கள்'' என்று சொன்னவர்கள் சோப்புத் தயாரிப்பின்போது மேலை நாடுகள் குறிப்பாக வல்லரசிய நாடுகள் பின்பற்றும் அதே முறையிலேயே சோப்புத் தயாரிக்கக் கற்றுக் கொடுத்ததோடு செயற்கையான மணத்துக்கு செயற்கை நறுமணங்களை சேர்த்துக் கொள்ளச் சொல்லவும் காஸ்ட்ரிக் சோடா போன்ற கேடு விளைவிக்கக் கூடிய வேதிப் பொருட்களை பயன்படுத்தச் சொல்லியும் வழிகாட்டினர்.

வல்லரசியத்திற்கு எதிரான தேசிய உற்பத்திப் பொருட்கள் அனைத்திலும் மரபு சார்ந்த தேசிய உள்ளீடு இருக்கவேண்டும் என்பதை மறுப்பதாக இருந்தது இந்நிகழ்வு.

மேலும் தமிழ்நாட்டில் எத்தனையோ குடிசைத் தொழில்களும் சிறு உற்பத்தியாளர்களும் இருக்கையில் கேரளாவிலிருந்து கேரள சுதேசிக்காரர்களை அழைத்து வந்து நிகழ்ச்சி செய்தது தமிழக மக்களின் தமிழ்த் தேசிய உணர்வோடு எந்த வகையிலும் ஒட்டவில்லை.

அவர்கள் இந்தியாவிற்குள் உள்ளடக்கப் பட்டிருக்கிற பல்வேறு தேசிய முதலாளிகள் எனில் அவர்களுக்கு இந்தியப் பார்ப்பனியம் என்பது எதிரி இல்லையா?

இந்தியப் பார்ப்பனிய அரசை எதிர்க்காத அதன் கட்டமைப்பை உடைத்தெறிய முழங்காத தேசிய முதலாளி என்றால் இவர்கள் இந்தியாவிற்கான தேசிய முதலாளி என்று ஒரு இந்தியத் தேசிய முதலாளி வகுப்பைக் கற்பனை செய்து கொண்டல்லவா அணிசேர அழைக்கிறார்கள்.

இதைத்தானே பாரதீய ஜனதாவும் தன் சுதேசியக் கொள்கை அடிப்படையில் இந்தியப் பார்ப்பனியத்தைத் தாங்குகிறவர்களையே சுதேசிகள் என்கிறார்கள்.

காஷ்மீரத்தில் இருக்கிற ஒரு சிறுதொழில் முதலாளி காஷ்மீரிய தேசிய முதலாளியாக இருக்க முடியுமா? இந்தியாவின் தேசிய முதலாளியாக இருக்க முடியுமா?

தமிழ்நாட்டின் பொன்வண்டு சோப்புக்கும், பிற சிறு தொழில் உற்பத்திக்கும் இந்தியா முழுமைக்கும் இந்திய விற்பனைச் சந்தை உருவாக முடியுமா?

இந்தியா முழுமையும் வணிகச் சந்தையை விரித்திருக்கிற மார்வாடிகளும் பிறரும் இந்தியப் பார்ப்பனிய அதிகார வகுப்பின் அடிதாங்கிகளாகவும், தாங்களே அதிகார வகுப்பினர்களாகவும் இருக்க முடியுமே அல்லாமல் அவர்கள் இந்தியப் பார்ப்பனியத்தின் தேசிய முதலாளிகளாக எவ்வாறு ஆக முடியும்?

இந்தியா என்பதையே ஒரு தேசம் என்று ஒப்புக்கொள்ள இயலாதபோது, ம.க.இ.க. இந்தியாவின் முதலாளிகள் என்றும், இந்தியத் தேசியத்தின் முதலாளிகள் என்றும் யாரைக் குறிப்பிடுகிறது?

அல்லது இந்தியாவிற்குள் உள்ளடக்கப்பட்ட தேசங்களின் முதலாளிகளையே தேசிய முதலாளிகள் என்று கூறுவார்களானால் அவர்கள் எப்படி தாங்கள் இந்திய முதலாளிகள் என்கிற கருத்தில் இந்திய அளவில் ஒருங்கிணைய முடியும். தேசியம் பற்றியும் சரி, தேசிய விடுதலைப் போராட்டம் குறித்தும் சரி, நாடு பற்றியும் சரி, நாட்டு விடுதலை பற்றியும் சரி தெளிவற்றுக் குழம்பியும் குழப்பவும் செய்யும் ம.க.இ.க. எப்படி மறுகாலனியத்திற்கு எதிராகப் போராட முடியும்.

சுதேசி என்று குரல் எழுப்பி வல்லரசியத்துடன் சுருண்டு படுத்துக் கொள்ளும் பா.ஜ.க. போல் அல்லவா இவர்கள் இந்திய நாட்டினர் என்று குரல் எழுப்பி இந்தியப் பார்ப்பனிய வல்லரசியக் கட்டமைப்புக்குள் சுருண்டு படுத்துக் கொள்கின்றனர்.

தேசியத்தில் தெளிவடையாத இவர்களால் தேசிய முதலாளிகளை அடையாளம் காண முடியாதது போலவே, இந்தியப் பார்ப்பனிய வல்லரசியக் கட்டமைப்பை அடையாளம் காண முடியாத இவர்களால் அதை எதிர்த்துப் போராடிடவும் முடியாது.

ம.க.இ.க.வினர் தங்கள் தேசியத்தைத் தெளிவு படுத்தட்டும்!

## கேரளாவோ நாடு... தமிழகமோ மாநிலமா...

கேரளாவிலிருந்து அழைத்து வரப்பட்டிருந்த கூராசுண்டு இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் மலையாளத்தில் பேசும்போது கேரளாவை 'எங்கட நாட்டிலே', 'எங்கட நாடு' என்று அடிக்கடி 'நாடு' என்றே கேரளாவைக் குறித்துப் பேசினர். அதனை தமிழில் மொழிபெயர்த்த ம.க.இ.க.வினரோ 'எங்கள் மாநிலத்திலே', 'எங்கள் மாநிலம்' என்று 'நாடு' என்பதை மாநிலமாக மொழிபெயர்த்தனர். என்னே இவர்களது இந்தியப் பற்று!

மேலும் அவர்கள் எங்கள் நாட்டு(கேரளா) வேளாண்மையும் சிறுதொழில்களும் அந்நிய கம்பெனிகளால் அழித்தொழிக்கப்படுவதைப் பார்த்துக் கொண்டு எங்களால் பொறுமையாக இருக்க முடியவில்லை என்று உண்மையான கேரள நாட்டுப் பற்றோடு பேசியதில் உணர்வு இருந்தது. ம.க.இ.க.வினரோ அந்த உணர்வுகளே இல்லாத இந்திய உணர்வாக அதை மாற்ற முயற்சித்துத் தோற்றுப் போயினர்.

# நம்

# அழுகையையும் சினத்தையும் தீர்மானிப்பவர்கள்...

www.padippakam.com

"நீங்கள் போலீஸ் பற்றி உங்கள் இதழில் எழுதும்போதெல்லாம் ஏன் இவ்வளவு மோசமாக எழுதுகிறீர்கள் என்று நான் பலமுறை கேட்டிருக்கிறேனே. இப்போதுதான் நான் அறிகிறேன் எவ்வளவு மோசமானவர்கள் இவர்கள் என்று" — என்று நக்கீரன் இணையாசிரியரிடம் வேதனையோடு கூறினார் முன்னாள் முதல்வர் கருணாநிதி. பட்டால்தான் தெரியும் என்பார்களே. அதுபோல் பட்டுத் தெரிந்துகொண்டுள்ளாரா கருணாநிதி? தெரிந்து கொண்ட கருணாநிதி இனி காவல்துறை அதிகாரத்தைக் குறைக்கப் போராடுவாரா? அல்லது காவல் துறையிடமிருந்து அவர்களின் வெறித்தனத்திற்கான ஆயுதங்களைப் பறித்து விடுவாரா?

வீரப்பனைத் தேடுவதாக எங்கள் காடுகளில் நுழைந்து எமது தாய் மற்றும் சகோதரிகளைக் கதற, கதற பலாத்காரம் செய்து எமது தந்தை மற்றும் சகோதரர்களை ஆண்டுக் கணக்கில் சிறை வைத்த இந்த மோசடிக் கும்பல் குறித்து எங்களுக்கு இப்போதுதானா தெரியும்?

பொன்னூரில் சாதிவெறியர்களை எதிர்த்ததனால் காவல் வெறியர்கள் எம் மக்களைத் தாக்கி சின்னாபின்ன படுத்தினார்களே; வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி ஐந்து பத்து ஐம்பதும் சேர்த்து உழைத்துக் களைத்த அலுப்பு தீர நாம் வாங்கி வைத்திருந்த தொலைக்காட்சி முதலான பொருட்களை, "இந்த அடிமைச் சாதிக்குத் தொலைக்காட்சி ஒரு கேடா" என்று அடித்து உடைத்தார்களே!


காவல் காடைகளிடமிருந்து தமது மானத்தைக் காக்க ஓடியபோது தன் கரு கலைந்து உருக்குலைந்து போனாளே எம் ஆசிரிய சகோதரி அப்போது தெரியாதா இந்த இரக்கமற்ற அரக்க கூட்டம் பற்றி?

ஆர்.கே. பேட்டையில் எங்கள் ஆண்கள் வேலைக்குச் சென்ற நேரம் பார்த்திருந்து எங்கள் சிற்றூரில் ஒவ்வொரு வீடாக நிதானமாக நுழைந்து அடித்து நொறுக்கி நாங்கள் சேர்த்த செல்வங்களைக் கொள்ளையிட்டுக் கொண்டும் மற்றவற்றை தீயிட்டுக் கொளுத்திவிட்டும் இருந்த சாதி வெறியர்களைத் தடுக்கும்படி எதிரில் இருந்த காவல் நிலையத்தில் கதறியபோது இழிவாக எங்கள் தாய்மார்களிடம் பேசியதோடு அந்த இரண்டு மணி நேர வன்முறையை மசாலா படம் பார்த்த மகிழ்ச்சியோடு டீ குடிக்கச் சென்ற இந்த மிருகக் கூட்டம்பற்றி அப்போதே தெரியாதா?

அண்ணாமலை நகரில் 500 ரூபாய் மின்விசிறித் திருட்டுக்குச் சந்தேகப்பட்டு அழைத்துச் சென்ற கணவரை மீட்கச் சென்ற எம் சகோதரி பத்மினியைப் பல இரவுகள் தூக்கமின்றி அடித்த நாய்கள் பத்மினி மோசமான பெண் என்றும் தனது காம வெறியாட்டத்தை மறைக்க போலி நாடகம் ஆடினாள் என்றும் இந்த அயோக்கியக் கூட்டம் கூறியதே! அதுபற்றி அப்போதே தெரியாதா?

இதுபோன்ற பல அயோக்கியத்தனங்களையும் அத்துமீறல்களையும் மக்களிடம் அடுக்கடுக்காகப் பேசி அரியணை ஏறி காவல்துறையின் ஈரல் கெட்டுவிட்டது சரிசெய்கிறேன் என்று உடன்பிறப்புக்கு கடிதம் எழுதிவிட்டு...

உழைக்கும் மக்களுக்காக நமது சகோதரர்கள் கூலி உயர்வு குறித்து பேரணி போனவர்களைத் துரத்தி துரத்தி அடித்து தாமிரவருணி ஆற்றில் மூழ்கடித்து 17 பேரைக் கொன்றுவிட்டு பெண் போலீஸ்மீது கல்லெறிந்ததால் இப்படிச் செய்ய நேர்ந்தது என்று திரைக்கதை அமைத்ததே கருணாநிதியின் காவல்படைதானே! அப்போது கூடவா தெரியாது? ஆனால் அவர்களுக்காக அல்லவா கருணாநிதி வக்காலத்து வாங்கினார்.



அன்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் உதயக்குமார் என்ற மாணவரைக் கொன்ற காவல் துறையினரைக் காப்பாற்றுகிற வகையில் காவல்துறைக்கு நஞ்சூட்டி வளர்த்தவரே கருணாநிதிதானே.

ஆனால், இவ்வளவும் பார்த்தும் கேட்டும் அனுபவித்த பிறகும்கூட கருணாநிதியிடம் இந்த காவலர்கள் நடந்துகொண்ட விதத்தை பார்த்த போது நம் குடும்பத்தவர் ஒருவருக்கு நேர்ந்த இன்னலாகக் கருதி கலங்கினோமே ஏன்?

துன்பம் யாருக்கு நேர்ந்தாலும் வருந்துவதும் அதை எதிர்ப்பதும் மக்களாகிய நமது பண்பு. இந்த பண்பை ஆதிக்க வர்க்கம் தமது தொடர்பு சாதனங்கள் மூலம் அவற்றின் தேவைக்கேற்ப கூட்டியும், குறைத்தும் மாற்றியும் அமைத்துக் கொள்கின்றன.

இவற்றை அறிந்து இவற்றையும் நாம் கைப்பற்றாத வரை நாம் யாருக்காக அழவேண்டும், எதற்காகக் கோபப்பட வேண்டும் என்பதைக் கூட தீர்மானிப்பவர்கள் அவர்களாக அல்லவா இருப்பார்கள்.

*

www.padippakam.com

# ஐ.நா. மாநாட்டில் குரலெழுப்புவதைத் தடுக்க இந்தியா யார்?

அன்றைக்கும் இதேதான் நடந்தது.

வட்ட மேசை மாநாடுகளில் இங்குள்ள சாதியச் சிக்கல்களைப் பேசக்கூடாது என்று கூக்குரலிட்டனர் காங்கிரசுக்காரர்கள்.

ஆனால் வட்டமேசை மாநாடுகளில் பேசிய இரட்டைமலை சீனிவாசனும், அம்பேத்கரும் இங்குள்ள சாதிய முடை நாற்றத்தை அவிழ்த்துக் காட்டினர்.

சாதியின் சிக்கல்களைப் புரிந்துகொண்டு தாழ்த்தப்பட்ட மக்களைத் தன்வயப்படுத்திக் கொள்ள வேண்டுமான நோக்கத்தில் வேலை வாய்ப்புகளிலும், கல்வியிலும் தாழ்த்தப் பட்டோருக்கும் இட ஒதுக்கீடு அளித்தான் ஆங்கிலேயன்.

கல்வி அறிய வாய்ப்பில்லாத மக்கள் ஆங்கிலேயனின் கல்வியைப் படித்தனர். அவன் ஆளுமைக்கான அரசு வேலை வாய்ப்புகள் தாழ்த்தப்பட்டோருக்கும் கிடைத்தது.

இந்திய ஆட்சியதிகாரம் ஆங்கிலேயனிட மிருந்து இந்தியப் பார்ப்பனியத்திடம் கை மாறிய பின், இந்திய வேலை வாய்ப்புகளில் இட ஒதுக்கீடு தொடர்ந்தது. அம்பேத்கர், இரட்டை மலை சீனிவாசன் ஆகியோரின் உழைப்பால் கிடைத்த வெற்றியாக அது இருந்தது.

அதேபோல் இந்தியப் பார்ப்பனிய அரசுக்குச் சேவகம் செய்ய தாழ்த்தப்பட்டோர்கள் அணி திரண்டனர். பூணூல் இல்லாத இந்தியர்களாக, தாழ்த்தப் பட்ட பார்ப்பனியர்களான கல்வி இவர்களின் மூளைகளைச் சலவை செய்தது.

இராஜாஜி உட்கார்ந்த இருக்கையில் தாழ்த்தப்பட்டவன் உட்கார்ந்துவிட்டான் என மயிர்க் கூச்செரிந்தனர்.

குடியரசுத் தலைவராகத் தாழ்த்தப்பட்டோர்! தங்களுக்குக் குடுமி ஒன்றைத்தான் உருவாக்கிக் கொள்ளவில்லை. மற்றபடி இந்தியாவுக்குச் சாமரம் வீசத் தொடங்கிவிட்டனர்.

பூணூல் பிள்ளையார் ஊர்வலத்தைச் சேரியிலிருந்து சுமப்பதும், கார்கிலில் இறந்தவர்க்கு இரக்க அஞ்சலி செலுத்துவதும், கிரிக்கெட்டில் இந்தியா வெற்றிபெற வேண்டும் எனக் குதிப்பதுமான இந்தியக் கல்விதான் அம்பேத்கர் கற்றுக் கொள்ளச் சொன்னதாய் இவர்கள் கற்றுக் கொண்டனர்.

இன்றைக்கு டர்பனில் ஐ.நா. மாநாட்டில் சாதி ஒழிப்புப் பற்றிப் பேசிவிட்டால் எல்லாம் தீர்ந்துவிடும் என்கிற மனப்பாலில் அலைகின்றன தாழ்த்தப்பட்ட இயக்கங்கள்.

அங்குபோய் பேச அணியமாகியிருக்கும் திருமாவளவனோ, பிறரோ அங்குபோய்ப் பேசி விடுவதால் மட்டும் என்ன நடக்கும்?

இன்னும் நம்மை எப்படி அவனுக்கு அடிமையாக்குவது என்று புதுக் கணக்கை எழுத அமெரிக்காவும், இந்தியாவும் கூட்டுத் திட்டம் போடப் போகின்றன.

ஆனால் நமக்கு அதைப் பற்றிக் கவலை இருக்கிறதா?

ஐ.நா. மாநாட்டில் பேசுவதால் நமக்கு எந்த உரிமையும் கிடைத்துவிடப் போவதில்லை.

ஆனால் ஐ.நா. மாநாட்டில் நம் இழிநிலையைப் பேசக்கூடாது என மறுக்க எவனுக்கும் உரிமை இல்லை.

ஐ.நா.வில் சாதிபற்றி பேச முனைவது விஷமத்தனமானது என்றும், தேசத் துரோகமானது என்றும் இராமகோபாலன்கள் பேசுவது — அவர்களின் சாதி வெறித்தனத்தையே காட்டுகிறது.

சாதியை மறுத்துப் பேசுவது தேசத் துரோகம் என்று கூறுவதே அவர்களின் சாதிய இந்தியத் தேசத்தின் (!) பண்பு என்பதை நாம் உணர்தல் வேண்டும்.

இந்தியப் பார்ப்பனியம் நம் வாழ்வுரிமையை நசுக்கி வைத்திருப்பதற்கு அடங்கிக் கிடந்ததால் தான் நாம் இந்த இழிநிலையிலேயே கிடக்கிறோம்.

அடக்கப்பட்ட நம் வாழ்வுரிமைக்காகப் போராடுவதற்கு நாம் யாரிடமும் இசைவு கேட்டுக் கொண்டிருக்கத் தேவையில்லை.

ஐ.நா.வில் பேச இந்தியா தடைசெய்யுமானால் இந்தியத் தடையை உடைப்பதே நம் கடமை.

இந்தியப் பார்ப்பனியக் கட்டமைப்பை உடைக்காமல், இந்தியத் தடைகள் உடைபடாது.

*